பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

இனிது ரகசியம் அல்ல!

பதவிக் காலம் முடிந்து நாடு திரும்பும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப்புக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான பிரியாவிடைச் சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்களை 'காலைக்கதிர்' நாளிதழ் 'எக்ஸ்குழுஸிவ்' ஆக பக்கம் 03

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆனி 01 வெள்ளிக்கிழமை 15.06.2018 | கதிர் 221

ஞானசார தேரருக்கு ஒரு வருட கடூழியம்

ஹோமாகம நீதிவான் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 15

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை, ஹோமாகம நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து மிரட்டிய குற்றத்துக்காகப் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஒரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்து ஹோமாகம நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. பக்கம் 14

கல்வி நிலையம் இரவில் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வட்டுக்கோட்டைப் பகுதியில் இயங்கி வந்த தனியார் கல்வி நிறுவனம் ஒன்று இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனத்துக்குள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு உட்புகுந்த குழு ஒன்று தள பாடங் பக்கம் 14

தனியார் பஸ்களுக்கு நிரந்தர வழி அனுமதி

நேற்று வழங்கினார் முதலமைச்சர்

யாழ்ப்பானம், ஜூன் 15

வடக்கு மாகாணத் தனியார் பஸ் சேவைகளுக்கான நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் பக்கம் 14

வட்டு. ஆசிரியர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பதின்ம வயது சிறுமிகள் மூவருக்கு பாலியல் தொல்லை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

வட்டுக்கோட்டையிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர், அவரிடம் கற்கச் செல்லும் பதின்ம வயது மாணவிகள் சிலரை பக்கம் 14

மாணவிகள் மீது துன்புறுத்தல்கள்; தடுக்க இறுக்கமான நடவடிக்கை

கல்வி ராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 15

மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைக் கட்டுப் படுத்துவதற்கு இறுக்கமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனக் கல்வி இராஜாங்க அமைச்சர் பக்கம் 14

ராணுவம் நடத்தும் முன்பள்ளிகள் வட மாகாண சபையின் கீழ் வரும்

அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள முன்பள்ளிகளை வடக்கு மாகாண சபையின் அதி பக்கம் 03

விளக்கமற்றவர் ராஜித

முதல்வர் விக்கி பதிலடி

நாங்கள் சுட்டிக்காட்டும்போது அதை இனவாதம் எனக் கூறுவது விளக்கமில்லாத கூற்று என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன பக்கம் 14

போராளிக் குடும்பங்களுக்கு உதவி மறுப்பது நல்லதல்ல

அரசு மீது விக்கி காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பானம், ஜூன் 15

போராளிகளின் குடும்பங்களுக்கு உதவி வழங்குவதை மறுக்கும் ஜனாதி பக்கம் 14

சுதாகரின் பிள்ளைகளுக்கு மைத்திரி நல்ல செய்தியை வழங்கவேண்டும்

கூட்டமைப்பு கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பானம், ஜூன் 15

குழந்தைகளின் வாழ்வை வளப்படுத்தும் நல்லெண்ண அடிப்படையில் கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாயை இழந்து தந்தையின் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் ஆனந்தசுதாகரின் குழந்தைகளுக்கும் நல்ல செய்தியை வழங்கி அவர்களது வாழ்விலும் பக்கம் 03

13 லட்சம் தபால் நாட்டில் தேக்கம்

கொழும்பு, ஜூன் 15

தாபல் தொழிற்சங்கங்களின் தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தால் 13 இலட்சத்துக்கும் அதிகமான கடிதங்கள் தேங்கிக் கிடப்பதாகத் தபால் பக்கம் 14

எதிர்ப்புகளையடுத்து விலகினார் மஸ்தான்

கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பை அடுத்து இந்து பக்கம் 14

இந்து கலாசாரத்தைத் தவிர்த்து மஸ்தானுக்குப் பிரதி அமைச்சு

கொழும்பு, ஜூன் 15

பிரதி அமைச்சர் காதர் மஸ்தானின் துறைசார் பொறுப்புக்களிலிருந்து இந்து கலா பக்கம் 14

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு முதற் தடவையாக உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் எட்டுப் பக்கம் 14

வே.அன்பழகனின் தரம் 5 வினாத்தாள் இன்று முதல்



பிரபல ஆசிரியர் வே.அன்பழகன் தயாரித்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள், இன்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து வெளிவரும். பிரதிக்கு முந்துங்கள்.

மாவை முதல்வராவதை பலரும் விரும்புகின்றனர்

கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவே போட்டியிட வேண்டுமெனப் பலரும் விருப்பம் கொண்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir

வடக்கு மாகாண தனியார் பஸ்களுக்கான வழித்தட அனுமதிபத்திரத்தை முதலமைச்சர் வழங்கினார்!

கொழும்பு, ஜூன் 15

வடமாகாணதனியார் பஸ்களுக்கான வழித்தட அனுமதி பத் திரம் நேற்று வழங்கப்பட்டது

வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் வட மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபையும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு யாழ். கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் 10 மணியளவில் நடை பெற்றது.

வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் பிரதம அதிதாக கலந்துகொண்டு தனி யார் பஸ் உரிமையாளர்களுக் கான வழித்தட அனுமதி பத்தி ரத்தினை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து, வட மாகாண தனியார் பேருந்து உரி மையாளர் சங்கத்தினர் முதலமைச் சருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில், வடமாகாண தனியார் போக்குவரத்து உரிமை யாளர் சங்கத் தலைவர் உட்பட யாழ்.மாவட்ட தனியார் போக்கு வரத்துச் சங்கத் தலைவர் மற்றும் முகாமையாளர்கள், ஒவ்வொரு மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தலைவர்கள், உரிமையாளர் கள் எனப் பலர் கலந்து கொண்டி ருந்தனர்.

(க)

ஜனாதிபதியின் ஈகைத் திருநாள் வாழ்த்துச் செய்தி

மானிட வர்க்கத்தின் நலனுக்கும் பாதுகாப்பிற் கும் மனதைத் தூய்மைப் படுத்திக்கொள்வதேமுதன் மைத் தேவையாக அமை கின்றது. சமூகத்திற்கு ஒவ் வாத எவ்வாறான செயல் களினதும் ஆரம்பக் கரு மனித மனங்களி லேயே உதிக்கின்றது. அந்தவகை யில் மானிட வர்க்கத்தின் விடுதலையும் நலனும் மனிதநேயம்மிகு நற்சிந்த னைகள் வளமாகவும் பல மாகவும் அமையும் பின்னணியிலேயே உருவா கின்றது.

உலகவாழ் முஸ்லிம்கள் ஒரு மாத காலம் நோன்பு நோற்று தியாகத்தையும் சமாதானத்தை யும் நன்மதிப்பையும் முதன்மைப்படுத்தும் ஈதுல் பித்ர் ஈகைத்திருநாள் மூலம் இந்த உன்னதமான செய்தியினையே உலகிற்கு எடுத்துரைக்கின்றார் கள். அது உலக நியதியை உள்வாங்கிய செய்தி யுமாகும். உலகவாழ் மக்களின் நலனும் அவ் வாறான நற்செய்திகளின் பொருளைப் புரிந்து மற்றவர்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் புரிந்து ணர்விலேயே தங்கியிருக்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் பெரும் இக்கட்டான நிலைமையை சந்தித்திருக்கும் தற்கால உலக சமூகங்களுக்கிடையில் நல்லொழுக்கத்தையும் நேசக்கரத்தையும் நீட்டி, நேர்மையாக நடந்து கொள்வதிலேயேசமாதானம்மற்றும்நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் இதமான வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதையே றமழான் நோன்பு எமக்கு கற் றுக்கொடுக்கின்றது.

வெறுமனே வேதம் என்ற எல்லையைக் கடந்து உன்னதமான மனிதத்துவத்துடன் உறவாடும் நேர்மையான நோக்கைக் கொண்ட இலங்கை யருக்கும் உலகவாழ் இஸ்லாமியருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

மைத்திரிபால சிறிசேன

வலி. தெற்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் கண்டன தீர்மானம்

சுன்னாகம்,ஜூன்.15

இந்து கலாசார பிரதி அமைச்சராக இந்து அல்லாத முஸ்லிம் ஒருவர் நியமிக்கப் பட்டமைக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை அமர்வில் கண்டனம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நான்காவது சபைக் கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து சபையால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தவிசாளர் அறிவித்துள்ளார்.

(இ)

'வன்னி முரசம்' பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஜூன் 15

வவுனியாவில் 'வன்னி முரசம்' பத்திரிகை வெளியீட்டு வைக்கப்பட்டது.

வன்னி குறோஸ் அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பா ளர் ஆர்.ரூபன் தலை மை யில் வன் னி நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிவமோக னின்காரியாலயத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

பத்திரிகையின் முதற் பிரதியை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவ மோகன் வெளியிட்டு வைக்க வன்னி குறோஸ் மகளிர் பேரவையின் வவுனியா மாவட்ட இணைப் பாளர் செல்வி எஸ்.அர்ச்சனா பெற்றுக்கொண்டார்.

கவிஞரும், எழுத்தாளருமான யோ.புரட்சி பத்திரிகையின் விமர்சன உரையை ஆற்றினார். இந்நிகழ்வில் வன்னி குறோஸ் அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(இ-100)



வரலாற்றுச சிறப்பு மிக்க நயினை நாகபூ ஷணி ஆலய கொடியேற்றத் திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை பக்தர்கள் கூட்டம் அலைமோத பக்திபூர்வமாக நடைபெற்றது. நயினை அம்பாளுக்கு கொடியேற்றும் நிகழ்வும் பிள்ளையார், முருகன் சகிதம் அம்பாள் திருவீதியுலா வந்த கண்டுகொள்ளாக் காட்சியையும் இங்கு காணலாம்.

(இ)

நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தி

புனிதநோன்புப் பெரு நாளைக் கொண்டாடுகின்ற எமது முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

சுயதியாகம் மற்றும் மற் றவர்களுக்கு உதவுதல் என் பவற்றின் மகத்துவம் பற்றி புனித ரமழான் மாதம் எமக்கு நினைவூட்டுகின்றது. பல்வேறு இன மற் றும் சமய ரீதியான பின்னணிகளைக் கொண்ட மக்கள் மகிழ்ச்சியுடன் ஐக்கியப்படுவதற்கு இப் புனித மாதத்திலே எமக்கு வாய்ப்பு ஏற்படுகின் றது.

இப் புனித நாளினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல் மற்றும் எமது நாட்டிலே சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் போன்ற விடயங்களை மறக்காமல் இருப்பதற்கும் நாம் உறுதிபூணுவோம். தமது எதிர்காலம் குறித்து நம்பிக்கையற்றிருக்கும் மக்கள் தமது எதிர்பார்ப்பு களையும் மகிழ்ச்சியையும் அடைந்து கொள்வ தற்கு வாய்ப்புக் கிட்டவேண்டுமென நான் பிரார்த் திக்கின்றேன்.

ஈத் முபாரக்!

இரா. சம்பந்தன்
எதிர்க்கட்சித் தலைவர்.

வர்த்தக நிலையமொன்றில் தீ; 3 பெண்கள் பலி!

கொழும்பு, ஜூன் 15

பதுளை - பசறை நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக மூன்று பெண்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

தீவிபத்தின் காரணமாக குறித்த வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து நாசமாகியுள் ளதுடன், அதனுள் தங்கியிருந்த மூன்று பெண்களும் இதன்போது பலியாகி யுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், ஒன்றுவிட்ட உறவுக்காரப் பெண் ஒருவர் ஆகியோரே இவ்வாறு உயிரிழந் துள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

(க)

வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நுண்நிதிக் கடன் வழங்குவதற்குத் தடை

வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

வலி.மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசங்களில் நுண் நிதிக் கடன் நிறுவனங்கள் கடன் வழங்குவதை தடுத்து நிறுத்து வது என வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது.

இதுவரை கடன் வழங்கிய நிநி நிறுவனங்கள் கடன்களை பொதுமக்களுக்கு பாதிப்பில் லாத வகையில் மீள அறவிட வேண்டும் எனவும் அந்தத் தீர்மா னத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுண்நிதிக் கடன் வழங்குவ தும் ஒரு வகையில் தமிழ் மக் களை அடிமைப்படுத்தும் செயற் பாடாகும் எனவும் மேற்படி தீர்மானத் தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் நான் காவது பொதுக்கூட்டம் நேற்று முன் தினம் புதன்கிழமை பிர தேச சபையில் தவிசாளர் த.நட னேந்திரன் தலைமையில் நடை பெற்றது. இதன்போது உறுப் பினர் ந.பொன்ராசா கொண்டு வந்த மேற்படி பிரேரணை அனைத்து உறுப்பினர்களின தும் ஆதரவுடன் நிறைவேற்றப் பட்டது.

தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய பொன்ராசா கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு – கிழக்கு தமிழர் தாய கத்தில் உள்ள மக்கள் நுண்நி திக் கடன் நிறுவனங்களால் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டு வருகின்றனர். சிலர் உயிரிழந்துள்ளனர். பலர் தற் கொலைக்கு முயன்று காப்பாற் றப்பட்டுள்ளனர். எனினும், அந்த நிறுவனங்கள் தமது செயற்பாட்டை நிறுத்தியதாக இல்லை.

யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்கி தமது உறவுகள், உழைக் கும் பிள்ளைகள், கணவர் களைப் பறிகொடுத்ததுடன், வீடுகள், சொத்துக்களை இழந்து பொருளாதாரத்தில் பின்ன டைந்து கையறு நிலையில் நின்ற எமது மக்களை இலக்கு வைத்து தமிழர் தாயகப் பகுதி யில் நுண்நிதிக் கடன் நிறுவனங் கள் தமது செயற்பாட்டை ஆரம்பித்தன. குறிப்பாக, பெண் தலைமைத்துவக்குடும்பங்களே இவர்களின் முக்கிய இலக்காக இருக்கின்றன.

ஏனெனில், கேள்வி கேட்ப தற்கு யாரும் இல்லை, எப்படியும் அவர்களை வஞ்சித்து பணத் தைச் சுரண்ட முடியும் என்ற நம் பிக்கை அவர்களுக்கு இருக்கின் றது. அடுத்த வேளை உணவுக்கு என்ன வழி என்று தெரியாமல் ஏங்கிக்கொண்டிருக்கும் குடும் பங் களின் வீடு களுக் குச் சென்று உங்களுக்கு பணம் வேண்டுமா எனக் கேட்டால் யார் தான் மறுப்புச் சொல்வார்கள்?

எப்படிப் பணத்தைச் செலுத் துவோம், அதற்கான வழி என்ன என்பதைக்கூட ஆராய்வதற்கோ சிந்திப்பதற்கோ அவர்களால் முடியாது. ஏனெனில், தமது பிள்ளைகளின் பசிக்கு முன் னால் அவை எவையும் பெரிதா கத் தெரியாது. உடனே கடனுக்கு விண்ணப்பித்து பணத்தைப் பெறுவார்கள்.

மேலும், சில பெண்கள் மேற்படி நுண்நிதிக் கடன் நிறு வனங்களிடம் பெற்ற கடன் பணத்தை தமக்கு நெருக்க மானவர்களுக்கு கைமாற்றா கவும் வட்டிக்கும் கொடுத்துவிட்டு இன்று அதனால் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர்.

கல்வியறிவில் பின்தங்கிய கிராமப்புறங்களிலேயே இந்தச் செயற்பாடுகள் அதிகமாக உள்ளன. நுண்நிதிக் கடன் நிறுவனங்களும் இந்தக் கிராமங் களை இலக்குவைத்தே தமது காரியங்களை நிறைவேற்று கின்றன.

கடன் பெற்ற பெண்கள் செலுத்த முடியாமல் திண்டாடும் போது நிதி நிறுவனங்களின் ஊழியர்கள் அவர்களை பலர் முன்னிலையில் வாய்க்கு வந்த படி ஏசுதல், தங்களோடு சுகம் அனுபவிக்க வருமாறு வற்புறுத் தல், வீட்டில் இருக்கும் பொருட்க ளைப் பறித்துச் செல்லுதல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுக ளில் ஈடுபட்டு வருகின் றனர்.

மேற்படிநிதிநிறுவனங்களின் தொல்லைகள் காரணமாக வடக்கு – கிழக்கில் பல பெண்கள் தற்கொலை செய்திருக்கின் றனர். சிலர் குழந்தைகளுடன் குடும்பங்களாகவே தற்கொலை செய் திருக் கின் றனர். இது இவ்வாறிருக்க, தற்போதும் எமது வலி.மேற்கு பிரதேசத்தில் உள்ள பல கிராமங்களில் நுண்நிதிக் கடன் நிறுவனங்க ளின் பிரதிநிதிகள் வீட்டுக்கு வீடு அலைந்து திரிந்து கடன் கொடுத்து வருகின்றனர்.

தென்னிலங்கையில் இவ்வா றான கடன் வழங்கும் செயற்பா டுகள் இல்லை. அந்தமக்களிடம் இவர்கள் இவ்வாறான கடன் கொடுக்கும் திட்டத்தைச் செயற் படுத்த முடியாது. ஆனால், கேள்வி கேட்க யாரும் இல்லை என்ற நிலையில், எமது பிரதேச மக்களை அவர்கள் வாட்டி வதைக்கின்றனர். தென்னிலங் கையில் உள்ள முக்கிய பிரமுகர் களின் சொந்த நிறுவனங்களாக இயங்குகின்ற மேற்படி நுண்நி திக் கடன் நிறுவனங்கள் திட்ட மிட்ட ரீதியிலேயே வடக்கு – கிழக்குமக்களை இலக்குவைத்தி ருக்கின்றன. இதுவும் ஒரு வகை யில் தமிழ் மக்களை அடிமைப் படுத்தும் செயற்பாடே ஆகும்.

எனவே, இந்த அடிமைப்படுத் தலில் இருந்து எமது மக்களை மீட்டெடுக்கவும், எமது மக்களை வேதனைகளில் இருந்து பாது காக்கவும், அவர்களின் எதிர் கால நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு எமது பிரதேசத்தில் நுண்நிதிக் கடன் நிறுவனங்க ளின் கடன் வழங்கும் செயற்பா டுகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும். – எனத் தெரிவித் தார்.

மாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகள் இணைந்து கோருமிடத்து தான் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட் பாளராகப் போட்டியிடத் தயாரென மாவை சேனாதிராசா தெரிவித்த கருத்து தொடர்பில் வினவிய போதே சிறிதரன் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பாக அடுத்துவரும் வடக்கு மாகாண சபைத் தேர் தலில் யார் முதலமைச்சர் வேட் பாளராகப் போட்டியிடுவதென் பதில் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். எங்கள் கட்சி யின் தலைவர் மாவை சேனாதி ராசாவே முதலமைச்சர் வேட் பாளராகப் போட்டியிடவேண்டு மெனப் பலரும் விருப்பம் கொண்டுள்ளனர்.

இது பற்றிய கருத்துக்கள் வெளிவந்தமிண்ணமிருப்பதும் யாவரும் அறிந்ததே. இது தொடர்பில் பல்வேறு கருத்துக் கள் வரலாம். ஜனநாயக முறைப் படி கட்சிகள் தங்கள் கருத்துக் களை முன்வைக்கக் கூடும். அதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஆனால்மாகாணசபைத் தேர்தல் இன்னமும் அறிவிக் கப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் எந்தத் தேர்தல் முறையில் நடத்தப்படும், எந்தத் திகதியில் நடத்தப்படுமென்பது கூடக் கேள்விக்குறியாக இருக்கிறது. ஆயினும் இந்த வருடத்தில் தேர்தல் நடத்தப்படுமென அரசி யல் தலைவர்கள் ஆளுக்காள் மாறி மாறி அறிக்கைகளை விட் டாலும் கூட இவ்வருட இறுதிக் குள் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக் கள் மிகக் குறைவு.

மாவை சேனாதிராசாவின் பங்களிப்பு, அவரது கடந்தகால அரசியல் வாழ்க்கை, முத்த தலைவர் என்றவகையில் அவர் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதை எல்லோரும் விரும்புகிறார்கள். அந்த விருப் பத்துக்கு யாரும் மறுப்புத் தெரி விக்கவில்லை.

இருந்தாலும் காலம் பதில் சொல்லும். ஏனைய கட்சிகளது கருத்துக்களும் ஜனநாயக ரீதி யாக எடுக்கப்பட்டு எல்லோரு டைய கருத்துக்களின் அடிப் படையில் சுமுகமானதொரு முடிவே எட்டப்படும். இதில் யாருக் கும் பாதகங்கள் இருக்காது– என்றார்–என்றார். (ஜ–7)

சுதாகரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிச்சத்தை ஏற்படுத்தவேண்டு மெனத் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு கோரிக்கை விடுத்துள் ளது.

சிறையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரை பிள்ளைகளின் எதிர்காலம் கரு தித் பொதுமன்னிப்பின் அடிப் படையில் விடுதலை செய்ய வேண்டுமென்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் கோரினார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

இந்நிலையில் ஆனந்தசுதா கரின் விடுதலை குறித்து கருத்து வெளியிடுகையிலையே சிறி தரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் –

கிளிநொச்சி வரும் ஜனாதிபதி ஆ ன ந் த சு தா க ரி ன் கு ழ ந் தைகளுக்கு நல்ல செய்தியோடு வரவேண்டும். அவர்களின்தந்தை அவர்களோடு இணைந்து வாழ்வதற்கு வழி சமைக்க வேண்டுமென்று நாங்கள் எதிர் பார்க்கின்றோம். இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஜனாதிபதியுடன் பல தடவைகள் பேசியிருக் கின்றோம். அதேபோன்று நாடாளுமன்றத்திலும் பேசி யிருக்கின்றோம்.

ஆனந்தசுதாகர் மனிதாபி மான அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவேண்டுமென்பதே எல்லோருடைய அவாவாகும்.

ஆகவே ஜனாதிபதி குழந் தைகளின் எதிர்கால வாழ்வு கரு தியும் மனிதநேய அடிப்படை யிலும் அவரை விடுவிக்கவேண் டும் – என்றார். (ஜ–7)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டமையை அடுத்து கடந்த இரண்டு, மூன்று நாள் களாகத் தென்னிலங்கையில் பரபரப்பாகப் பேசப்படும் விடய மாக இது மாறிவருகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிக்குவதை அமெரிக்கா உட்பட மேற்குலகம் விரும்ப வில்லை என்ற செய்தியை இந் தச் சந்திப்பின்போது அமெரிக் கத் தூதுவர் வெளிப்படுத்தியிருந் தார்.

அமெரிக்கத்தூதுவர் அப்படிக் கூறினாரா என்பதை உறுதிப் படுத்துவதை விட, அமெரிக்கத் தூதுவர் – மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பின் உள் நுணுக்கத்தை 'காலைக்கதிர்' நாளிதழ் எப்படிப் பெற்றுக்கொண்டது, 'காலைக் கதிர்' இதழுக்கு அந்தச் செய்தி யைக் கனகச்சிதமாகக் கசிய விட்டவர் யார் என்பதை அறிவதில் தான் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அதிக சிரத்தை காட்டுகின்றன வாம்.

இந்த செய்தியால் ராஜபக்ஷக் களுக்கிடையிலேயே முரண்பாடு உச்சத்தைத் தொட்டிருப்பதாகத் தெரிகின்றது. செய்தியைக் கசிய விட்டவர் யார் என்பதை முகர்ந்து பிடித்து, அறிந்து சொல்கிறோம் என்று ஒவ்வொரு ராஜபக்ஷக்களுக் கும் நெருக்கமானவர்கள் சிலர் புறப்பட்டிருக்கின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் தற்போதும் மிக நெருக்கமான தொடர்பாடல்களைப் பேணும் தமிழ் ஊடகவியலாளர்கள் ஓரிருவரில் 'காலைக்கதிர்' ஆசிரி யரும் ஒருவர் என்று சில ஊடகங் கள் செய்தி வெளியிட்டிருக் கின்றன. அதன் மூலம் அந்தத் தகவல்களை மஹிந்த ராஜபக்ஷ விடமிருந்தே 'காலைக்கதிர்' பிடுங் கியிருக்கலாம் என்பது பலரது ஊகம்.

இந்த செய்தியால் ராஜபக்ஷக் களுக்குள் குழப்பம் ஏற்படுகின் றமையை விரும்பாத சில ஆதரவு வட்டாரங்கள், தேவைப்பட்டால் கோட்டாபயராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றங்களையும் நாடுங்கள் என்று புலம்பெயர் தமிழர்களை உசுப்பி விடுவதற் காக இந்தச் செய்தியை மூத்த தமிழ் ஊடகவியலாளர் மூலம் அமெரிக்கத் தரப்பே கசிய விட்டி ருப்பதாக அர்த்தம் பண்ணு கின்றன.

ஆனால், அமெரிக்க தூத ரகமோ இந்தச் செய்தி வெளி யானமை குறித்து அலட்டிக் கொள்ளாமல், வழமை போல அதீத மௌனம் காக்கின்றது.

எது, எப்படியென்றாலும் இந்தச்செய்தியால் தெற்கில் கோட் டாவின் மவுசு எக்கச்சக்க மாக எகிறியிருக்கின்றது என்கிறன தென்னிலங்கை வட்டாரங்கள்.

"எங்கள் தலைவரை நாங் கள் தெரிவு செய்கின்றமையை அமெரிக்கா தடுக்க விடுவதா?" – என்று சீறிக்கொண்டு தெற்கு ஆதரவாளர்கள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள்.

கடந்தபுதனன்றுகொழும்பில் மேற்குலகத் தூதரகம் ஒன்றின் பொது நிகழ்வு. அரசியல்வாதி கள், ஊடகவியலாளர்கள், இராஜ தந்திரிகள் என்று ஒரு முந்நூறு பேர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், 'காலைக்கதிர்' ஆசிரி யரை அடையாளம்கண்டுகொண்ட இராஜதந்திரிகள், முக்கிய அரசியல்வாதிகள் அவரிடம் நோண்டிய கேள்வி 'அந்தச் செய்தியின் மூலம் யார்? தந்த செய்தி வட்டாரம் எது?' – என்பது தான்.

எல்லோருக்கும்அவர்சொன்ன பதில் "Straight from the horse's mouth" *("உறுதியாகத்தகவல்தரக் கூடியவரின் வாயிலிருந்து பெற் றுக்கொண்டேன்")* என்பதுதான்.

நதி மூலம், ரிஷி மூலம் தேடக் கூடாது என்பார்கள். அது போன்றதே செய்தி மூலமும். செய்தி மூலத்தை அம்பலப்படுத் துபவன் – காட்டிக்கொடுப்பவன் – வெற்றிகரமான பத்திரிகை யாளனாக நிலைக்க முடியா தல்லவா?

யுத்த நெருக்கடிகள், அழுத் தங்கள், மிரட்டல்கள், அச்சுறுத்தல் களுக்கு மத்தியிலும் கூட செய்தி மூலங்களையும் செய்தியாளர் களையும் காட்டிக் கொடுக்காத யாழ் பத்திரிகையாளர்கள் அல் லவா நாங்கள்? எங்களிடம் செய்தி மூலத்தைக் கண்டறிவது குதிரைக் கொம்பை தேடுவதற்கு ஒப்பானது.

-மின்னல்-

ராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரத்தின் கீழ் கொண்டுவரவேண் டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு. அதற்கமைய நட வடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகக் கல்வி இரா ஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

மூன்று நாள் பயணமாக வடக்கு வந்துள்ள கல்வி இரா ஜாங்க அமைச்சரிடம், இராணு வத்தினடம் உள்ள முன்பள்ளி கள் தொடர்பில் எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

வடக்கில் முன்பள்ளிகளை இராணுவம் இயக்குவதாகவும் அவற்றை மாகாண சபையிடம் ஒப்படைக்கவேண்டுமென மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமைகுறித் தும் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நாடாளுமன்றத்திலும் பேசியிருக்கிறார்.

வடக்கு மாகாண சபை ஆரம் பிப்பதற்கு முன்னைய காலத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் முன்பள்ளிகள் இயங்கி வந் துள்ளன. ஆனால் தற்போது மாகாண சபையொன்று உரு வாக்கப்பட்டுமாகாண ஆட்சியும் நடக்கின்றது.

ஆகவே வடக்கு மாகாணத் திலுள்ள முன்பள்ளிகள் அனைத் தும் மாகாண சபையின் அதி காரத்தின் கீழேயே கொண்டு வரப்படவேண்டுமென்பதே எங்கள் கருத்தாகவும் இருக் கின்றது. இதனடிப்படையில் மாகாண சபைக்கு அந்த முன் பள்ளிகளைப் பெற்றுக் கொடுக் கும் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுவருகின்றன–என் றார். (ஜ–7)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

எது இனவாதம்?

தமது இனத்தின் உரிமைகளைக் கேட்டால் அவர்கள் இனவாதிகள்.

– இதுதான் பேரினவாதத்தின் இனவாதச் சூத்திரம்.

இப்படி வியாக்கியானம் செய்யும் விடயத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் யாரும் விதிவிலக்கானவர்கள் அல்லர். விக்கிரமபாகு கருணாரத்னவைப்போன்ற ஒரிருவரைத் தவிர, தென்னிலங்கை அரசியல்வாதிகள் எல்லோரும் இவ்விவகாரத்தில் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்.

அதைத்தான் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவின் தற்போதைய கருத்து நிலைப்பாடும் எடுத்தியம்புகின்றது.

"வடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் இனங்களுக்கு இடையே பிணக்கை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் இனவாதத்தை ஆயுதமாக்கி, அதன் மூலம் அரசியல் செய்கின்றார்கள். அரசியல் வங்குறோத்து நிலையை அடைந்துள்ளோரே வடக்கில் இனவாதப் பிரச்சினைகளை முன்னெடுக்கின்றனர்." **– இவ்வாறு கூறியிருக்கின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரத்ன.**

அவரை நாம் ஒரு பேரினவாதியாக நோக்கவில்லை. ஆனால் தமது பிரதேசத்தில் – தென்னிலங்கையில் – அரசியல் செய்வதானால் இப்படிப் பேசித்தானாக வேண்டும் என்பதற்காக அவர் இப்படிப் பேசுகின்றார் என நினைக்கிறோம். அல்லது அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் என்பதனால் அப்படித் தான் பேச வேண்டும்என்பதற்காகஅவ்வாறுபேசுகின்றாரோதெரியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் நடிகர் விஜய குமாரதுங்க ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைத் தொடக்கியபோது அதில் தமது அரசியலை ஆரம்பித்தவர் ராஜித சேனாரத்ன.

அவர், தமிழர்களின் நியாயமான ஆதங்கம் புரியாதவர் அல்லர். தமிழர்களின் அபிலாஷைகளில் உள்ள நீதி, நியாயம், தர்மம் அவருக்குப் புரியாதவையும் அல்ல.

தமிழர்களின் ஆதங்கத்தை – எதிர்பார்ப்பை – அபிலாஷையை – வேணவாவை – அப்படியே பிரதிபலிக்கும் வகையில் முதல்வர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றோர் கருத்து வெளியிடுகின்றமை இனவாதமல்ல என்பதும் டாக்டர் ராஜித சேனாரத்னவுக்கு விளங்காத விடயம் அல்ல.

தமிழர் தரப்பின் நீதியை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டால், தென்னிலங்கைப் பேரினவாதம் அதை அங்கீகரிக்காது, தம்மைப் புறமொதுக்கி விடும் என அஞ்சுகின்றார் யாதார்த்தம் புரிந்த டாக்டர் சேனாரத்ன.

தமிழர்கள் தங்கள் பக்கத்துக்கு நியாயத்தை உரக்கக் கூறி, நீதியைச் சத்தமிட்டு உரைத்து, நியாயத்தை ஆரவாரமாக வெளிப்படுத்தினால் அது தென்னிலங்கைப் பேரினவாதத்துக்கு பிடிப்பதில்லை.

அதனால், தமிழர் உரிமைக்கான கோரிக்கைகளை அமுக்கி வாசித்து, தென்னிலங்கை பௌத்த சிங்களப் பேரினவாதத்தை அங்கீகரித்தபடி, அடங்கி நின்று தீர்வைக் கோரும் சம்பந்தன் – சுமந்திரன் – மாவை போன்றோர் டாக்டர் சேனாரத்ன போன்றோரின் புத்தகத்தில் நல்லவர்கள்.

கெம்பி நின்று உரிமைக்குரல் எழுப்பும் முதல்வர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றோர் இனவாதிகள்.

இதுதான் அவர்களின் அரசியல் சூத்திரம். ஆனால் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். சம்பந்தன், சுமந்திரனிலிருந்து, முதல்வர் விக்கி, சிவாஜிலிங்கம் போன்றோரையும் தாண்டி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரை அனைவருமே தமிழர்களின் அடக்கப்பட்ட உரிமைகளுக்காக – மறுக்கப்பட்டநீதிக்காக – குரல்எழுப்பும்தலைவர்கள்தாம். குரல்எழுப்பும் கோணத்தில் அவர்களின் பாகைகள் ('டிகிரிகள்') வேறாக இருக்கலாம். ஆனால், எல்லாமேதமிழர்களின்உரிமைக்குரலுக்கான முகங்கள்தான்.

தமிழர் தரப்பில் உரிமைக்குரல் எழுப்புவோரை 'இனவாதிகள்' என விமர்சிக்கும் டாக்டர் ராஜித சேனாரத்ன தன்னுடைய பக்கத்திலும் – தனது அரசுப் பக்கத்திலும் – ஒரு தடவை நெஞ்சைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

அமைச்சரவைப் பேச்சாளரானதும் அவரே அது தொடர்பான ஆரம்பச் செய்தியாளர் மாநாடுகளில் ஒரு விடயத்தை மிக எடுப்பாக அறிவித்தார்.

கடந்த இருண்ட ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராகநடத்தப்பட்டஅட்டகாசங்கள்அம்பலப்படுத்தப்படும் என்றார். இருண்ட ஆட்சிக்காலத்தில் கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னர், உயிருடன் மீண்டு வந்த ஒரேயொரு தமிழ்ப் பத்திரிகையாளர் – யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார். அவரிடமிருந்து விசாரணைகளை ஆரம்பிப்போம். தமிழ் ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்து ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் இழைக்கப்பட்ட கொடூரங்களை விசாரித்து, அம்பலப்படுத்தி, குற்றவாளிகளைத் தண்டிப்போம் என்றெல்லாம் சூளுரைத்தார்.

அந்த சூளுரை என்னவாயிற்று?

தமிழ் ஊடகவியாலர்களுக்கு எதிராகக் கடந்த இருண்ட ஆட்சிக்காலத்தில் இழைக்கப்பட்ட கொடூரங்களை அம்பலப்படுத்த ஒரு சிறு துளி முயற்சியேனும் எடுக்கப்பட்டதா? அதில் சிறு நகர்வு ஏதும் இந்த அரசின் ஆட்சியில் இடம்பெற்றதா? குறைந்தபட்சம் உயிருடன் மீண்ட பத்திரிகையாளரிடம் ஒரு வாக்குமூலமாகவது பதியப்பட்டதா? எதுவுமே நடக்கவில்லை.

தெற்கில் பாதிக்கப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்களான லஸந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட, கீத் நொயர் என்று ஒவ்வொரு சிங்கள ஊடகவியலாளர் விடயத்திலும் விசாரணைகள் துரிதமாக முன்னேறுகின்றனவே?

இப்படி தமிழர்களுக்குப் பாகுபாடு காட்டும் விதத்தில் – அவர்களைப் புறமொதுக்கி நடக்கும் போக்கில் – செயற்படுகின்றமையைச் சுட்டிக்காட்டுவது இனவாதமா?

அல்லது, பாதிக்கப்பட்ட தமிழர்கள் விடயத்தில் விவகாரங்கள் அமுக்கி மறைத்துக் கொண்டு சிங்களவர் விடயத்தில் மட்டும் உரிய விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிவதற்குத் துரிதமாகச் செயற்படும் போக்கிற்குப் பெயர் இனவாதமா?

டாக்டர் ராஜித சேனாரத்ன இதனைத் தெளிவுபடுத்தினால் நல்லது.

விக்கி, சிவாஜிக்கு கன்னத்தில் அறை

கொழும்பு, ஜூன் 15

சிவில் பாதுகாப்புப் படையின் கேணல் ரத்னபிரிய பந்துவுக்குவிடுதலைப்புலிகள்அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் கண்ணீருடன் பிரியாவிடை வழங்கி, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரின் கன்னத்தில் அறைந்துள்ளனர்எனரியர்அட்மிரல்சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த விடயத்துக்குத் தலை வணங்கி அவர்கள் இருவரும் தமது பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும்.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து நாட்டை

கூறுகிறார் சரத் வீரசேகர

மீட்ட இராணுவத்தைச் சர்வதேசத்துக்குக் காட்டிக் கொடுத்து அவர்களை தண்டிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றது. நாட்டு இராணுவம் இழைக்காத யுத்தக்குற்ற விடயங்களை அடியொற்றி உருவாக்கப்பட்ட 30/1 பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை ஒவ்வொன்றாகச் செயற்படுத்தும் பணிகளை அரசு முன்னெடுத்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதலைத் தடுப்பதற்கான பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அரசு காணாமற் போனோர் தொடர்பிலான அலுவலகத்தை உருவாக்கியுள்ளது. எமது நாட்டின் இராணுவத்தைச் சிறையில் அடைக்கின்றார்கள். அதேபோல் எமது இராணுவத்தைச் சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கும் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மௌனமாக இருப்பது ஏன் என புரியவில்லை. – என்றார். (ஐ)

பொன்னாலையில் கடற்படையினர் நீர் எடுப்பதை கட்டுப்படுத்தவேண்டும்

வலி.மேற்கு பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பொன்னாலையில் இருந்து கடற்படையினர் நன்னீர் எடுத்துச் செல்வதை உடனடியாகக் கட்டுப்படுத்தவேண்டும் என வலி.மேற்கு பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்குபிரதேசசபையின் நான்காவது கூட்டம் நேற்று முன்தினம்தவிசாளர்த.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உறுப்பினர் ந.பொன்ராசா,பொன்னாலையில் கடற்படை தண்ணீர் எடுத்துச் செல்வதைக்கட்டுப்படுத்தவேண்டும் என பிரேரணை கொண்டு வந்தார். இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையைச்சபையில் முன்வைத்து உரையாற்றிய பொன்ராசா, கடற்படையினர் தினமும் 50 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 65 ஆயிரம் லீற்றர் வரையான நன்னீரை எடுத்துச் செல்கின்றனர்எனவும்இந்நிலை தொடர்ந்தால் பொன்னாலை மக்கள் குடிதண்ணீருக்காக அலைய வேண்டிய நிலை ஏற்படும்எனச்சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பொன்னாலைநன்னீர்வளம் குறைந்த பிரதேசமாகும். கடலுக்கு மிகச் சமீபத்தில் இக்கிராமம் அமைந்துள்ளதால்கடல்நீர் மிக இலகுவாக நிலத்தடி நீரை மாற்றக்கூடிய அபாயம்உள்ளது.

இங்கு முன்னோர்கள் தமது ஆன்மீக, விஞ்ஞான ஆய்வுகள் மூலம் கண்டறிந்த இடங்களில் அமைத்த ஒருசில கிணறுகளே இன்றும் நன்னீர் வளம் மிக்க கிணறுகளாக உள்ளன.

பொன்னாலை குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தில் உள்ள இரு கிணறுகளில் இருந்து கடற்படையினர் எடுத்துச் செல்லும் நன்னீரை சுழிபுரம் சம்பில்துறையில் முகாமிட்டுள்ள கடற்படையினர் குளிப்பதற்கும் அந்த கடற்படை முகாமிலும் அங்குள்ள பௌத்த விகாரையிலும் உள்ள மரக்கன்றுகளுக்கு ஊற்றுவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

தினமும் இவ்வாறு அதிகளவான நன்னீர் எடுத்துச்செல்லப்படுவதால்பொன்னாலையில் நன்னீர் வளம் அற்றுப்போகும் சூழல் உருவாகியுள்ளது.

பொன்னாலை குடிதண்ணீர் விநியோகத்தின் மூலம் பொது மக்களுக்கு தினமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் விநியோகிக்கப்படுகின்றது. ஆனால், கடற்படையினர் இரவு பகலாக நன்னீரைச் சுரண்டிச் செல்கின்றனர்.

இச்செயற்பாட்டால் பொன்னாலையில் உள்ள நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாற்றமடைந்து வருகின்றன. கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் மக்கள் நன்னீர் எடுத்துப் பருகிய சில கிணறுகள் இப்போது உவர் நீராக மாற்றமடைந்துள்ளன. இங்கு விவசாயச் செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை என்பனவும் பாதிப்படைந்துள்ளன.

இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் சில வருடங்களில் பொன்னாலையில் அறவே குடிதண்ணீர் இல்லாத நிலை ஏற்படும். பொன்னாலை குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தையும் பிரதேச சபை கைவிட வேண்டிய நிலை வரும். மக்கள் தண்ணீருக்கு அலையவேண்டி ஏற்படும்.

கடற்படையின் இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்காக கடந்த சில வருடங்களாக தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், குறித்த கிணறுகள் அமைந்துள்ள காணியைக் கடற்படையினர் கொள்வனவு செய்துள்ளனர் எனக் காரணம் காட்டி அதிகாரிகள் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

ஒரு காணியைக் கொள்வனவுசெய்துவீடுகட்டினால்அங்கு நாம் வசிக்க முடியுமே தவிர விபசாரம் செய்ய முடியாது. அதுபோல், கடற்படையினர் அந்தக் காணியை வாங்கிவிட்டார்கள் என்பதற்காக எமது இயற்கை வளத்தைச் சுரண்டிச் செல்வதை அனுமதிக்கமுடியாது.

இதேவேளை, கடற்படையினரின் நீர்ச்சுரண்டலுக்கான மின்சாரக் கட்டணத்தை எமது வலி.மேற்கு பிரதேச சபையே இதுவரை செலுத்திக்கொண்டிருக்கின்றது. அத்துடன், அங்கு படையினர் அமைத்துள்ள மினி முகாமுக்கும் 24 மணிநேர மின் விநியோகத்திற்கான கட்டணத்தையும் பிரதேச சபையே செலுத்துகின்றது.

பிரதேச சபை அதிகாரிகள் இதுவரை இச்செயற்பாட்டைத் தொடர்ந்தமைவிசனத்திற்குரியது. பொன்னாலையில் வீதிகளுக்கு மின்விளக்குகளைப் பொருத்துவதற்கு நிதி இல்லை எனக் கூறுகின்ற எமது இந்தச் சபை, கடற்படைக்கு எவ்வாறு மின்கட்டணத்தைச் செலுத்த முடியும்?

எனவே, இது மக்களின் அடிப்படைத் தேவை என்ற ரீதியில், இதைத்தடுத்து நிறுத்தவேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் வலி.மேற்கு பிரதேச சபைக்கு உண்டு.பிரதேசசபைஉடனடியாக நீர்வளச் சபையைத் தொடர்பு கொண்டு உரிய ஆய்வை மேற் கொள்ளவேண்டும். கடற்படை தினமும் 10 ஆயிரம் லீற்றருக்கு மேற்பட்ட நீரை எடுத்துச் செல்வதை அனுமதிக்கக்கூடாது.

கடற்படையினர் நீரைப் பெறுவதற்கான மின்சாரக் கொடுப்பனவு மற்றும் கடற்படை மினி முகாமுக்கான மின் விநியோகக் கொடுப்பனவு என்பவற்றை வலி.மேற்கு பிரதேச சபை இனிச் செலுத்தக்கூடாது.

இதுவரை பிரதேச சபையால் செலுத்தப்பட்ட மின் கட்டணத்தைக்கடற்படையினரிடம்இருந்து மீள அறவிட்டு பொன்னாலையில் மின் விளக்குகளைப் பொருத்த அந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். – என்றார்.

நாளை

16.06.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் :பூரம்பூசம் பி.ப 12.55 வரை
திதி : திருதியை மு.இ 7.15 வரை
சுபநேரம் : 2.53 – 4.23 வரை
இராகுகாலம் : 8.53 – 10.23 வரை

மீள் குடியேறிய இத்தாவில் மக்கள் கடும் காற்று காரணமாக பாதிப்பு

பளை,ஜூன் 15

கடந்த சில நாள்களாக நாட்டில் ஏற்பட்ட கடும் காற்றினால் பல்வேறுபட்ட சேதங்கள் ஏற்பட்டுள்ளன.இதனால் பச்சிலைப்பள்ளியின் இத்தாவில் கிராமத்தில் புதிதாக மீள்குடியேறிய மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். இது தொடர்பாக பச்சிலைப் பள்ளி பிரதேசசபை தவிசாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு சென்ற அவரும் குழுவினரும் உடனடியாக அமைப்புக்களுடனும் ,அரச அதிகாரிகளுடனும் தொடர்பினை ஏற்படுத்தி நிலைமையை தெரியப் படுத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் அவ்விடத்துக்கு வருகை தந்து மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இங்கு மக்கள் தமக்கு நிரந்தர வீடு வேண்டும் எனவும் அதுவும் வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்படும் குறைந்த தொகை வீடு வேண்டாம் எனவும் கூறியிருந்தனர். (இ)

கேர்ணல் ரத்னப்பிரிய பந்துவை விஸ்வமடுவுக்கே நியமியுங்கள்!

விஸ்வமடு பாதுகாப்பு முகாம் பொறுப் பதிகாரியாகவிருந்த கேர்ணல் ரத்னப் பிரிய பந்துவை மீண்டும் அதே பிரதே சத்துக்கு நியமிக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

இது தொடர்பில் எழுத்து மூலம் ஜனாதி பதிக்கு அறிவிக் கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கேர்ணல் ரத்னப்பிரிய பந்துவின் முன்மாதிரி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக் களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்த முன்மாதிரியைத் தொடர அவருக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

விஸ்வமடு மக்களின் கோரிக்கைப் படி அவரின் இடமாற்றத்தை ரத்து செய்து அந்தப் பகுதிக்கே தொடர்ந்தும் அவரை நியமிக்குமாறும் விமல் வீரவன்ச அக் கடிதத்தில் கோரியுள்ளார். (க)

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி புதிய கட்டடம் மாணவர்களிடம் கையளிப்பு

யாழ். கரவெட்டி தேவரை யாளி இந்துக் கல்லூரியின் புதிய கட்டட திறப்பு விழா கல்வி இராஜாங்க அமைச்சர் விஜிராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற் றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர், ஆசி ரியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சர வணபவன் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ் முதல்வர் ஆர்னோல்டின் ஏற்பாட்டில் பூ மழைபொழிந்த ஹெலி



கோடி அற்புதராம் பாசையூர் புனிதஅந்தோனியார் தேவா லயத்தின் வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. இதன்போது திருப்பலி கூட்டுத திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இப் பெருந்திருவிழாவின் சிறப்பம்சமாக பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தின் உற்சவத்தை முன்னிட்டு திருச்சொரூபம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இதன் போது அவ்வூரைச் சேர்ந்த மைந்தன் ஒருவரின் நிதிபங்களிப் புடன், யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆர் னோல்டின் ஏற்பாட்டில் வானில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் மலர் தூவப்பட்டது.

புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உற்சவவரலாற்றில் முதல் முறையாக வானில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் மலர் தூவப்பட்டதை கண்ணுற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் யாழ் முதல்வரின் இந்தச் செயலுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசனிக்கிழமை காலை 8 மணியி லிருந்து மாலை 6 மணி வரை–

யாழ் பிரதேசத்தில் -

எள்ளன்குளம், கரணவாய், கொற் றாவத்தை, பொலிகண்டி, இலந்தைக் காடு, நெடியகாடு, ஊரணி, ஆலடி, கரம்பைக்குறிச்சி, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் -

மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, அண்ணாநகர், பூந்தோட்டம், குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங் களிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியி யலாளர் அறிவித்துள்ளார். (இ)

உயர்தரத்திலான யூரோ-4 எரிபொருள் ஓரிரு வாரங்களில் சந்தையில்!

கொழும்பு, ஜூன் 15

தற்போது விற்பனை செய்யப்படும் சூப்பர் பெற்றோல் மற்றும் சூப்பர் டீசலுக்கு பதிலாக உயர்தரத்திலான யூரோ-4 என்ற எரிபொருள் ஓரிரு வாரங்களில் இலங்கை சந்தையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கனியவள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

யூரோ ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த யூரோ-4 எரிபொருள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் விலை அதிகரிக்காது என்று அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

தினசரி ராசி பலன் (15.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. துவிதீயைத்திதி மாலை 6.09 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: திருவாதிரை பகல் 11.21 மணி வரை. பின்னர் புனர்பூசம். சித்தயோகம் முழுவதும்.

ராகுகாலம் - பகல் 10.36 மணி முதல் 12.10 மணி வரை.
சுபநேரம் - காலை 5.55 மணி முதல் 7.25 மணி வரை.
பிறந்த நட்சத்திர வழிபாடு - திருவாதிரை, புனர்பூசம்

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம் சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். சில முயற்சிகளில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நிலையில் சிறிது பாதிப்பு ஏற்ட்டு சரியாகும்.

ரிஷபம் இனிமையான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவந்து சேரும். உடல் நிலைதேறும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்க வாய்ப்புகள் தேடிவரும். நண்பர்களுடைய ஒத்துழைப்பு மனதுக்கு தென்புதரும்.

மிதுனம் ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாகக் காணப்படும். பிள்ளைகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபகாரியங்கள் நடக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கும் நிலை உண்டாகும்.

கடகம் சஞ்சலமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் ஏற்படும் சில குழப்பங்களால் மன நிம்மதி குறையும். உடல் நிலையில் சிற கோளாறு தோன்றி நிவர்த்தியாகும். அவசரத்தையும், பதற்றத்தையும் கைவிடவேண்டும்.

சிம்மம் யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். எடுத்த காரியங்கள் வெற்றி இலக்கைத் தொடும்.

கன்னி மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலனில் கவனம் தேவைப்படும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நலம். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

துலாம் சுபீட்சமான நாள். பணபலம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் தேடி வந்து உதவுவார்கள். தடை விலகி திருமணம் கைகூடும்.

விருச்சிகம் யோசனையான நாள். வருமானம் சற்றுக் குறையும். உறவினர்களால் வரவும், செலவும் மாறி மாறிவரும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் தோன்றும். வீண் அலைச்சல்களால் உடல் நலம் பாதிப்படையும்.

தனுசு விருத்தியான நாள். எடுத்த செயல்களை வெற்றிகரமாக முடிப்பார்கள். புதுமுயற்சிகள் கைகூடும். இதுவரை இருந்த சிரமங்கள் குறையும். உடன்பிறந்தவர்களால் அனுகூலம் உண்டாகும்.

மகரம் இனிமையானநாள். பொருளாதாரம்மனநிறைவைத்தரும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பெண்களுக்கு புதிய முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றி கொடுக்கும். நீண்ட காலம் காணதிருந்த உறவுகளைக் கண்டு மகிழ்வார்கள்.

கும்பம் நன்மையான நாள். பணவரவு திருப்தியைத் தரும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். உடல்நலம் சீரடையும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். நினைத்த காரியம் கைகூடி சந்தோசம் தரும்.

மீனம் சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். அலைச்சல்கள் அதிகரிக்கும். தூர தேச பிரயாணம் செல்ல நேரிடும். செய்யும் தொழிலில் விருத்தி குன்றும்.

சந்திராஷ்டம நாள்; விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில்பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் இடம்பெற்றது.

சமூக சமய நல்லிணக்கத்திற்கான இப்தார் நிகழ்வாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் மௌலவி எம் ஆர் பைறூஸ், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய குருக்கள் சிறிகந்ததாச குருக்கள், கூளாமுறிப்பு பங்குத் தந்தை அருட்பணி நிக்ஸன் கொலின் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட செயலக அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(இ - 81)

படங்கள் :- சண்முகம் தவசீலன்

ஊர்காவற்றுறை கிழக்கு ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய பரிபாலன சபையினர் வேண்டுதலுக்கு அமைய வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் நிதிப் பங்களிப்பில் அன்னதான சபைக்கான ஒரு தொகுதி சமையற் தளபாடங்களை தீவகம் வடக்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீசன் முன்னிலையில் அறங்காவலர் சபை உறுப்பினர்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்ட போது கலாசார உத்தியோகத்தர் நிரூபாவும் பிரசன்னமாகியிருந்தார். (இ)

கிரிக்கெட் சபை தேர்தலை நடத்த அனுமதி!

இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்தலை நடத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு நேற்று நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக தேர்தலை நடத்துவது தொடர்பில், விளையாட்டுத் துறை அமைச்சர் நீதிமன்றுக்கு சமர்ப்பித்திருந்த காரணங்களை ஆராய்ந்து, தேர்தலை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய (பேச்சிஅம்மன்)வருடாந்த மகோற் சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடாந்து 15 நாள்கள் நடைபெறவுள்ள மகோற்சவ நிகழ்வில் 23 ஆம் திகதி சனி இரவு 8 மணிக்கு மஞ்சமும் 25 ஆம் திகதி திங்கள் மாலை 4மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய் இரவு8மணிக்கு சப்பறமும் மறுநாள் புதன்கிழமை முற்பகல்10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ)

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும்

ஐம்பதுக்கு ஐம்பதா? அறுபதுக்கு நாற்பதா? நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஜூன் 15

புதிய கலப்பு முறையின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை ஐம்பதுக்கு ஐம்பது வீதம் நடத்துவதா? அல்லது அறுபதுக்கு நாற்பது வீதம் நடத்துவதா? என்பதனை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தெனியாய தேசிய பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தேர்தல்கள் தாமதமாகின்றன. உரிய நேரத்தில் தேர்தல் நடத்தாவிடின் நாட்டிலும் அரசநிறுவனங்களிலும் பல குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன.

ஆகவே, தேர்தல் உடன் நடத்த வேண்டும். இல்லையேல் ஜனநாயகத்திற்கு அது பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

இதனால், ஜனநாயகமும் அபிவிருத்தியும் அதல பாதாளத்திற்கு தள்ளப்பட்டுவிடும். சாதாரண சங்கம் என்றாலும் இடைக்கிடையே தேர்தல் நடத்தப்பட்டு புதியவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அதேபோன்றே மாகாண சபைகளுக்கு உரிய நேரத்தில் புதியவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

மாகாண சபைக்கு புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தற்போதைக்கு ஐம்பது வீதம்விகிதாசாரமுறைமையில் இருந்தும் ஐம்பது வீதம் தொகுதி வாரி முறைமையில் இருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே புதிய முறைமையில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

எனினும், அதனை விட 60 வீதம் தொகுதி வாரியாகவும் 40 வீதம் விகிதாசார அடிப்படையில்தெரிவுசெய்யவேண்டும் எனப் பலர் கோருகின்றனர்.

இந்த நிலையில், தற்போது எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் உள்ள நிலையில் அதனை நாடாளுமன்றம் நிறைவேற்றித் தந்தால் மாத்திரமே எனக்கு தேர்தலை நடத்த முடியும். ஐம்பதுக்கு ஐம்பதா அல்லது அறுபதுக்கு நாற்பதா என்ற தீர்மானத்தைநாடாளுமன்றமேஎடுக்க வேண்டும்.

அதுமாத்திரமின்றி தொகுதிகளின் எண்ணிக்கையை குறைப்பதானாலும் அதனையும் நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். இதற்கு அப்பால் பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதாக இருந்தால்அதனையும்நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யும் பழங்களுக்கு வரியை அதிகரிக்க நடவடிக்கை

உள்ளூர் பழ உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பழங்களுக்கான வரியை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தலவில பிரதேசத்தில் உள்ள கிராமசக்தி உற்பத்தி கிராமத்திற்கு நேற்றுமுன்தினம் முற்பகல் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தலவில பிரதேசத்திற்கு ஜனாதிபதி ஒருவர் வருகை தந்தது இதுவே முதற் தடவை என்பதனால் ஜனாதிபதியின் இந்த விஜயம் விசேடமாக கருதப்பட்டதுடன், மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு ஜனாதிபதியை வரவேற்றனர்.

மக்களுடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதியிடம் தாம் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் தெரிவித்தனர்.

நீர்த்தட்டுப்பாடு, மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள், பாதை வசதிகள், விவசாய உபகரண தட்டுப்பாடுகள் மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன அவற்றில் முக்கியமானவை.

பிரதேசத்தில் நிலவும் மின்சக்தி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இதனுடன் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு மின்வலு அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவொன்றினை ஒரு வார காலத்திற்குள் குறித்த பிரதேசத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி இதன் போது நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன், தமது பழ உற்பத்திகளுக்கு உரிய விலைகளை பெற்றுக்கொள்ள முடியாமை தொடர்பாக இதன் போது பிரதேச பழ உற்பத்தியாளர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்ததுடன், பழங்களின் இறக்குமதியினால்தமதுதொழிலுக்கு ஏற்பட்டுள்ள சவால்களுக்கு தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி –

பழங்கள் மற்றும் விவசாய உற்பத்தி தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கிறன். அதற்கமைய உள்நாட்டு பழ உற்பத்தியாளர்களைப் பாது காப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பழங்களின் வரியை அகரிப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்எனவும்ஜனாதிபதிகுறிப்பிட்டார்.

கிராமசக்தி உற்பத்தி கிராமத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால விஜயம்

புத்தளம் மாவட்டத்திலுள்ள முகத்துவாரம் கிராம சக்தி உற்பத்தி கிராமத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

முகத்துவாரம் சிங்கள மகா வித்தியாலயத்தில் மக்களை சந்தித்து, அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்திய ஜனாதிபதி, அவற்றிற்கு உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதன்போது பிரதேச மக்கள் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பளித்தனர்.

கிராமசக்தி மக்கள் இயக்கத்தால் முகத்துவாரம் கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டின் முதலாவது தவணைக் கொடுப்பனவும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

கல்பிட்டி மற்றும் முகத்துவாரம் பிரதேசங்களுக்கு பயணிக்கும் முகத்துவார சிங்கள வித்தியாலய மாணவ மாணவியர்களுக்கு போக்குவரத்து வசதிக்கான படகொன்றை பெற்றுத்தருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பாக கவனம் செலுத்திய ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் புத்தகங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார, பிரதி அமைச்சர் இந்திக்க பன்டார நாயக்க, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க, மாகாண அமைச்சர் சுமல் திசேரா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தலவில அன்னம்மாள் தேவாலய ஆராதனையில் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜூன் 15

தலவில பிரதேசத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலவில புனித அன்னம்மாள் தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனையில் பங்குபற்றினார்.

இந்த தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டு 250 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு சஞ்சிகையும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதியின் விஜயத்தின்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வெரன்ஸ் மென்டிஸ் ஆயர் உள்ளிட்ட தலவில பிரதேச கிறிஸ்தவ மத பாதிரியார்கள் பங்குபற்றினர்.

அனைத்து பரீட்சைகளும் குறிப்பிட்ட வகையில் தடையின்றி இடம்பெறும்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஜூன் மாதம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அனைத்து பரீட்சைகளும் குறிப்பிட்ட வகையில் இடம்பெறும் என்று இலங்கை பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போழுது நிலவும் தபால் பகிஷ்கரிப்பு காரணமாக தகுதியான பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை கிடைக்காத போதிலும் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எந்தவொரு பரீட்சார்த்திக்காவது பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கவில்லை ஆயின் பரீட்சை திணைக்களம் அல்லது வெளிநாட்டு பரீட்சை கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், குறிப்பிட்ட பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை நடைபெறும் திகதி, பரீட்சைநடைபெறும்மத்தியநிலையம்ஆகியவற்றுடன், குறுஞ் செய்தி ஒன்று விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசிக்கு கிடைக்கப் பெறும்.

தற்போழுது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள பரீட்சைக்கான பரீட்சை கட்டணம் செலுத்துவதற்கு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மௌலவி வி.எஸ்.முஹம்மத் முஸம்மில் அல் புகாரி

பெருநாள் தொழுகைக்கு கோடீஸ்வரன் கூட திடலுக்கு வரவேண்டும்!

நோன்புக்கான அறிவிப்பை ஏந்தி ரமழான் பிறை வந்தது. தினமும் மெள்ள வளர்ந்தது; நிறைந்தது. பின் தினமும் மெள்ளத் தேயத் தொடங்கும். தேய்ந்து மறையும். பின் மீண்டும் ஷவ்வாலின் பிறை கருமேகத்தில் சின்னதாகப் புன்முறுவலித்து, எட்டிப்பார்க்கும். பிறை தென்பட்டதும் 'இறைவன் மிகப்பெரியவன்' என்னும் புகழ்மொழி, நன்றிப்பெருக்கோடு 'அல்லாஹு அக்பர்' என்று விண்தொட்டு நிற்கும்.

பெருநாள் பிறை தென்பட்டதும், உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உற்சாகம் பெருவெள்ளமாகப் பெருகி, மகிழ்ச்சி நதி வீதியோடும். பசித்திருந்த வயிறுகளில் பால்சுரக்கும். விழித்திருந்த விழிகளில் ஒளி பிறக்கும். ஸதக்கதுல் பித்ர் என்னும் பெருநாள் தர்மத்தை முஸ்லிம்கள் வழங்கத் தொடங்குவார்கள்.

பெருநாள் தொழுகை

அதிகாலை துயிலெழுந்து வழக்கம் போல் ஃபஜ்ர் என்னும் வைகறைத் தொழுகை தொழுவார்கள். நேரமே குளித்து, புத்தாடையணிந்து, வண்ணப் பூக்களாக மக்கள் தோட்டம் மலரத் தொடங்கும். ஒரு மாதம் நோன்பிருந்தனர். இன்று பெருநாளல்லவா..? உணவருந்துவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்காகச் செல்லும்போது உணவருந்தாமல் செல்வார்கள். ஆனால், நோன்புப் பெருநாள் தொழுகைக்காகச் செல்வதற்கு முன்னர் உணவருந்துவார்கள். பேரீச்சம் பழங்களை ஒற்றைப்படையில் உண்பது அவர்கள் வழக்கம். பழங்களைச் சாப்பிட்டுவிட்டு தொழுகைக் காகத் திடலேகுவார்கள்.

வழக்கமாகத் தொழுகை யாவும் பள்ளிவாசல்களில் தாம் நடைபெறும். ஆனால், பெருநாள் தொழுகையை நபி(ஸல்)அவர்கள் மைதானத்தில் சென்று தொழுதார்கள். ஒவ்வொரு தொழுகைக்கும் பாங்கு எனப்படும் தொழுகை அழைப்பு விடுக்கப்படும். ஆனால், பெருநாள் தொழுகைக்கு அழைப்பு எதுவும் இல்லை.

குளித்து முடித்து, புத்தாடைய ணிந்து காலையிலேயே மக்கள் சாரை சாரையாகத் திடலுக்கு வரத் தொடங் கிவிடுவார்கள். நபி(ஸல்) அவர்கள் திடலுக்குச் செல்லும்போதும், தொழுகை முடித்து திடலிலிருந்து திரும்பும்போதும் வெவ்வேறு பாதைகளைப் பயன்படுத்துவார்கள். ஏனென்றால், போகும்போது ஒருவழியாகச் சென் றால் அப்பகுதி மக்களைச் சந்திப்பார்கள். திரும்பும்போது மறுவழியில் இன்னும் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பிருக்கும் அல்லவா...?

ரமழான் சிறப்புத் தொழுகை

வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ எனும் சிறப்புத் தொழுகை பள்ளிவாசல்களில் நடைபெறும். அப்போது முதலில் சிறப்புச் சொற்பொழிவு இருக்கும். அதன் பின்னரே தொழுகை நடைபெறும். ஆனால், பெருநாள்களின்போது முதலில் தொழுகை நடைபெறும். பின்னர் மக்களுக்குத் தேவையான உபதேசங்களை வழங்குவதற்காகச் சொற்பொழிவு நடைபெறும்.

நபி (ஸல்)அவர்கள் திடலுக்குச் சென்றதும், தொழுகை நடத்துவார் கள். பின்னர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அதன் பிறகு தோழர் பிலாலை அழைத்துக் கொண்டு பெண்கள் பகு திக்குச் சென்று தர்மம் செய்வதை வலியுறுத்தி, உரை நிகழ்த்துவார்கள். பெண்கள் தர்மம் செய்வார்கள். பின்னர் அவர்கள் இல்லம் திரும்புவார்கள்.

தொழுகை முடிந்ததும், ஆனந்தப்பேருவகையால் ஒருவரையொரு வர் ஆரத்தழுவி அன்பையும் வாழ்த்துகளையும் பரிமாறிக்கொள்வார்கள். பெருநாள் என்பது அவ்வளவுதான்! ஆனால், அந்தப் பெருநாள்கள் தரும் மகத்தான பாடமும் செய்தியும் என்ன தெரியுமா..?

படிப்பினை தரும் பண்டிகை!

இஸ்லாமியர்களுக்கு இரண்டே பண்டிகைகள்தாம். ஒன்று நோன்புப் பெருநாள். மற்றொன்று ஹஜ்ஜுப் பெருநாள். இஸ்லாம் கூறும் இரு பெருநாள்களும் வெறும் கொண்டாட்டத்துக்கான நாள்களல்ல. வாண வேடிக்கை, வேட்டு, ஆடல், பாடல்... என எந்த ஆரவாரமும் இல்லாத சாந்திமிக்க அமைதித் திருநாள்களே இப்பெருநாள்கள். கண்ணியம் மிளிரும் புண்ணிய நாள்களே பெரு நாள்கள். இந்தத் திருநாள்களின் போது 'இறைவன் மிகப்பெரியவன்' எனும் புகழ்மொழியான 'அல்லாஹு அக்பர்' என்று சொல்லி அளவுக்கதிகமாக இறைவனைப் புகழ வேண்டும்.

மனிதர்கள் அனைவரும் ஒரே சமுதாயம். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லை. நிறம், குலம் என்ற வேறுபாடு இல்லை. எவ்வளவுதான் பணம் படைத்தவனாயினும் இறைவன் திருமுன் அவனும் அடிமையே! 'இறைவா! நாங்கள் அடிமைகளே. நீயே மிகப்பெரியவன்' என்று உரத்துச் சொல்ல வேண்டும்.

பெருநாள் என்பது...

'இறைவா.. நீயே மிகப்பெரியவன்' என்று கோடீஸ்வரனும் சொல்லுவான். இறைவன் பெரியவன். அவன் மட்டுமே பெரியவன். மற்றவர்கள் அடிமைகள். ஆதத்தின் பிள்ளைகள் அனைவரும் சமம். என்னதான் பளிங்குக் கற்களான மாட மாளிகை இருந்தாலும், கோடீஸ்வரனும் பெருநாள் தொழுகைத் திடலுக்கு வரவேண்டும். தோளோடு தோள் சேர்ந்து நிற்க வேண்டும். இறைவன் திருமுன் சிரம்பணிய வேண்டும்.

பசியறியும் பயிற்சி, தியாகத்தின் பாடம் என்ற இருபெரும் பேருண்மைகளை புரியவைத்து அதற்கு நன்றி செலுத்தும் தருணங்களாகவே பெருநாள்கள் கொண்டாடப்படுகின்றன. பெருநாள் என்பது இறை வனை வணங்குவது, அவன் புகழ்பாடுவது, அவனுக்கு நன்றி செலுத்துவது என்ற அம்சங்கள்தாம்.

இப் பெருநாளின்போது நபி ஸல்)அவர்கள் உரை நிகழ்த்துவார்கள். இறைவனைப் புகழ்ந்தவண்ணம் இறையச்சத்தை அடிப்படையாகக்கொண்ட அந்த

உரையில் மனிதனிடம் களையப்பட வேண்டிய தீமைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைக் கண்டித்தும் நன்மைகளை அடையாளப்படுத்தி, அவற்றை ஊக்கப்படுத்தவும் செய்வார்கள்.

ஒன்று கூடினோம்; தொழுதோம்; கலைந்தோம் என்றில்லாமல் இன்றைய சூழலில் மனிதனிடம் மிகுந்து வரும் தீமைகளை எச்சரித்தும், நன்மைகளை மேலோங்கச் செய்ய வலியுறுத்தியும் பெருநாள் தொழுகையின் போது உரை நிகழ்த்தப்படும்.

இதுவே ஈகைத் திருநாள் தரும் செய்தி! ★

அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி எல்லோரும் கொண்டாடுவோம்!

உலக முஸ்லிம் அனைவரும் புனித மிகு றமழான் மாதத்தில் இறைவனால் கடமையாக்கப்பட்ட ஒரு மாத கால நோன்பை நோற்றுள்ளார்கள். கடந்த ஒரு மாதமாக பகல் முழுவதும் பசித்திருந்து இரவு வேளைகளில் தொழுகை, குர் ஆன் ஓதல் மற்றும் நல்லமல்களை நிறைவேற்றியுள்ளார்கள். றமழானின் இறுதிப் பத்து நாள்களில் பள்ளிவாசல்களில் இஃ்திஹாப் இருந்தும், ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஓர் இரவான லைலத்துல் கதிர் இரவு முழுவதும் சுன்னத்தான பல்வேறு தொழுகைகளை நிறைவேற்றியும் உள்ளார்கள்.

இவ்விரவில் முன்பின் செய்த பாவங்களுக்கும் பெற்றோர்கள் செய்த பாவங்களுக்காகவும் அல்லாஹ்விடம் இறைந்து மன்றாடி 'தௌபா'வை மேற் கொண்டுள்ளார்கள். நோன்பிருந்த காலப்பகுதியில் பொய் சொல்லல், புறம்பேசுதல், தீய காரியங்களிலிருந்து தவிர்த்தல் மற்றும் பிறருக்கு உதவுதல், பொறுமை, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல் போன்ற நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகளை ஏற்று நடந்துள்ளார்கள்.

நோன்பிருந்து நற்காரியங்களில் ஈடுபட்ட அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக ஆமீன்.

இன்று அதிகாலை எழுந்து குளித்து நறுமனம் பூசி நோன்புப் பெருநாள் தொழுகைக்காக பள்ளிவாசல் அல்லது மைதானம்சென்றுஜும்மாப்பிரசங்கத்தையும்நிறைவேற்றியபின்னர்ஒருவருக்கொருவர் கட்டியணைத்து 'முஸாபஹ' செய்தல் வழமையானதாகும். இன்று உற்றார் உறவினர்களைச் சந்தித்தல், நண்பர்

களை அன்பாக நேசித்தல் அயலில் வசிக்கும் பிறமத சகோதரர்களுடன் பெருநாள் சந்தோஷங்களைத் தெரிவிப்பதும் முக்கியமானதாகும்.

ஒரு மாத காலமாக பகல் உணவை உண்ணாமல் நோன்பிருந்தோம். ஆனால் இன்று பெருநாள் தினத்தில் குடும்ப சகிதம் பகல் உணவைப் புசித்து சந்தோஷமாக வாழ்வதற்கே இப் பெருநாள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மகத்தான பெருநாள் தினத்தில் வீண் விளையாட்டுக்கள், மதுபானம், போதை வஸ்து போன்றவற்றில் ஈடுபடுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் அவசியமாகும். இதை மீறி செயற்பட்டால் றமழான் நோன்பின் மாண்பை இழந்து விடுவோம். நாம் செய்ய தியாகம் பாழாகிவிடும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்லருள் புரிவானாக.

ஆமீன்! ஆமீன்! யாரப்பில் ஆலமீன்!

கலாபூஷணம் எம்.எல்.லாபிர்
தலைவர்- பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளி

சிறைக் கூண்டிலேயே வாலிபத்தைக் கழித்த பேரறிவாளன்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக, பேரறிவாளன் சிறையில் அடைக்கப்பட்டு கடந்த 11 ஆம் திகதியுடன் 27 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன.

அவர் வெளியில் வாழ்ந்ததை விட சிறைக்குள் தான் 8 வருடங்கள் கூடுதலாக வாழ்ந்துள்ளார் என்பது பெரும் சோகம்.

இளமை கனவுகளோடு வாழ்ந்த 19வது வயதில் கைது செய்யப்பட்ட பேரறிவாளனுக்கு இப்போது 46 வயது. ஏறத்தாழ மனிதனின் சராசரி ஆயுள் காலத்தில் பாதிக்கும் மேற்பட்ட பருவத்திற்கு வந்து விட்டார்.

ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக, 1991ம் ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி பேரறிவாளன் கைது செய்யப்பட்டார்.

உண்மையை சொல்ல வேண்டுமானால், சிறு விசாரணையாகத் தான் இருக்கும், மறுநாளே திருப்பியனுப்பிவிடுவார்கள் என்று நினைத்து, பேரறிவாளனை அவரது பெற்றோரே பொலிஸில் ஒப்படைத்திருந்தனர்.

ஆனால் நாளை வருவார் என நம்பி பெற்றோர் அனுப்பிய நபர் 27 வருடங்களாக (பரோல் காலத்தை தவிர்த்து) சிறைக்குள்தான் அடைபட்டு கிடக்கிறார்.

ராஜீவ் கொலை வழக்கை சிபிஐ விசாரித்தது. ஒரே நாள் விசாரணையில் பேரறிவாளனை திரும்ப அனுப்புவோம் என்று தான் சிபிஐயின் சில அதிகாரிகள் அவர் பெற்றோரிடம் கூறியிருந்தனர்.

ஆனால், விசாரணை ஆரம்பித்த அடுத்த 59 நாள்களாக பேரறிவாளன் எங்கே இருக்கிறார் என்பது கூட தெரியாமல் மர்மமாக மறைக்கப்பட்டது.

பேரறிவாளனின் மற்றொரு பெயர் அறிவு. அப்படிச் சொன்னால் தான் அவரது உறவுக்கார வட்டாரத்தில் தெரிகிறது. 59 நாள்களாக அறிவு எங்கே இருந்தார் என்பதே தெரியாத நிலையிலும், பொலீஸ் மீதான பயத்தால் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்யாமல் இருந்தோம் என்கிறார் பேரறிவாளன் உறவுக்காரர் ஒருவர்.

பேரறிவாளன் குற்றமற்றவர் என்பதால் அதை நிரூபிக்க பெரிய கஷ்டம் இருக்கப் போவதில்லை, எப்படியும் விடுதலையாகி வெளியே வருவார் என்பதே அவரது பெற்றோர் நம்பிக்கையாக இருந்தது. 27 வருடங்களுக்கு பிறகும், பேரறிவாளனின் தாயார் அதே நம்பிக்கையில் தான் இருக்கிறார்.

நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற இந்திய சட்டத்தின் மீது அவருக்கு அபார நம்பிக்கை.

அனைத்து கதவுகளையும் தட்டி பேரறிவாளன் நிரபராதி என நிரூபிக்கத் தேவையான முயற்சிகளை செய்தனர். இன்னமும் செய்து கொண்டே தான் இருக்கின்றனர்.

இத்தனை சிறைவாசத்திற்கும் காரணம் 9 வோல்ட் பற்றரியை பேரறிவாளன் வாங்கியதுதானாம். இது பெட்டிக்கடைகளில் கூட கிடைக்கக் கூடிய பற்றரி தான். ஆனால், இந்த பற்றரியை பயன்படுத்தி தான், ராஜீவ் கொலையாளிகள் குண்டு தயாரித்தனர் என்கிறது சிபிஐ.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், பேரறிவாளன்தான் தனது கடையில் பற்றரி வாங்கினார் என சம்பவம் நடந்து பல மாதங்களுக்கு பிறகு பெட்டிக்கடைக்காரர் ஞாபகம் வைத்துக்கொண்டு வாக்குமூலம் அளித்தது தான்.

அதுமட்டுமல்ல ஆச்சரியம். பற்றரி வாங்கியதாக கூறப்பட்ட நாளுக்கு பல மாதங்களுக்கு பிறகு அதற்கான ரசீது பேரறிவாளன் சட்டைப் பையில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக சிபிஐ கூறியதுதான். மேலும் ஓர் ஆதாரமாக, தான்தான் பற்றரி வாங்கினேன் அதை ராஜீவ் கொலையாளி என கூறப்படும் சிவராசனிடம் கொடுத்தேன் என பேரறிவாளன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதும் சிபிஐயால் நீதிமன்றில் முன் வைக்கப்பட்டது.

இவரது வாக்குமூலம் அடிப்படையில் தான் பேரறிவாளனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் கடந்த வருடம் ஒக்ரோபர் 27 ஆம் திகதி முன்னாள் சிபிஐ அதிகாரி வி.தியாகராஜன் உச்ச நீதிமன்றில் ஒரு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார். அதில், பேரறிவாளன் வாக்குமூலத்தை தான்தான் பதிவு செய்ததாகவும், ஆனால், பற்றரி வாங்கியது தான்தான் என்றும், அது எதற்காக பயன்படுத்தப்பட போகிறது என்பது தனக்குத் தெரியாது என்றும் பேரறிவாளன் கூறியவற்றை மட்டும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரவில்லை என்றும் பரபரப்பு தகவலை தெரிவித்தார்.

மேலும், 1991 ஆம் ஆண்டு மே 7 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்க முன்னணி தலைவரான பொட்டு அம்மானுடன் சிவராசன் பேசிய வயர்லெஸ் உரையாடலை இடைமறித்து கேட்டபோது, தனக்கும் (சிவராசன்), சுபா மற்றும் தனு ஆகியவருக்கும் மட்டுமே நமது நோக்கம் தெரியும் எனக் கூறியதாகவும், இதை வைத்து பார்க்கும்போது பேரறிவாளனுக்கு ஏன் பற்றரி வாங்கிவரச் சொன்னார்கள் என்பதே தெரியாது என்பது உறுதிப்படுவதாகவும் தியாகராஜன் குறிப்பிட்டார். பேரறிவாளன் வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாக வைத்துதான் 27 வருடங்களாக அவர் சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளார் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

19 வயதில் கைதான இந்தத் தமிழ் மகன் 46 வயதிலும் காத்திருக்கிறார் வெளியே வர!

வாக்குமூலம் பொலிஸாரால் எப்படி பெறப்படும், அதிலும் இப்படி ஒரு முக்கிய வழக்கில் எப்படி பெறப்பட்டிருக்கும் என்பது உலகறிந்த விடயம்தானே என்கிறார்கள் சட்டத்துறையில் உள்ளவர்கள்.

வெற்று காகிதத்தில் பேரறிவாளனிடம் கையெழுத்து வாங்கி அதில் இஷ்டத்திற்கு எழுதி, வாக்குமூலமாக சமர்ப்பித்ததாகவும் தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. 27 வருட சிறை வாசத்தில், 23 ஆண்டுகள் அவர் மரண தண்டனை கைதியாக இருந்தார் (2014ல் உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக மாற்றியது). அப்போது பல முறை தூக்கிற்கு நாள் குறிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.

பல மோசமான உளவியல், உடலியல் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. இருப்பினும், பேரறிவாளனின் புன்முறுவலை யாராலும் பறிக்க முடியவில்லை.

சிறைக்குள் இருந்தபடி 7 ஆவது தேர்வு எழுதிய பேரறிவாளன் 91.33 சதவீத மதிப்பெண் பெற்று தேர்வானார். தமிழ்நாடுதிறந்தவெளிப் பல்கலைக்கழக தேர்வில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார் பேரறிவாளன்.

பெயருக்கேற்ற அறிவு அவருக்குள் இருப்பதை இவை உணர்த்துகின்றன. எம்சிஏ படிப்பையும்விடவில்லை பேரறிவாளன். இதுமட்டுமா, சிறைக்குள் உள்ள சக கைதிகளுக்கு டியூசன் சொல்லிக் கொடுக் கிறார். சக கைதிகளுடன்சிறைக்குள்இசைக்குழுவை ஏற்படுத்தி பிறரை மகிழ் வித்து வருகிறார்.

இவரது நற்பழக்கங்களால் ஈர்க்கப் பட்ட முன்னாள் கைதி பொன்னப்பன் என்பவர் இப்போது காஞ்சியில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி அறக்கட்டளையே நடத்தி வருகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

தனது 46 வயது மகன் வாழ்க்கையில் ஒரு நல்லது நடந்து விடாதா என்று தமிழ் பெண்களுக்கே உள்ள தீரத்தோடு சட்டப் போராட்டத்தை நடத்தி வருகிறார் 71 வயதாகும் தாய் அற்புதம்மாள்.

இன்று பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும் என்பது தமிழகத்தில் ஒரு மக்கள் இயக்கமாக மாறியுள்ளது.

சிபிஐ விசாரித்த வழக்கு என்பதால் மாநில அரசுக்கு அவரை விடுதலை செய்ய அதிகாரம் இல்லை. மத்திய அரசின் கையில் பந்து உள்ளது. அரசியல் காரணங்களுக்காக பேரறிவாளன் விடுதலை தள்ளிப்போகிறது. இதற்கு விடிவுகாலம் எப்போது?

கொழும்பு – புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயிபாபா மத்திய நிலையத்தில் வருடாந்த இப்தார் நிகழ்வு கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் முகமது இக்பால் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, இராஜகிரிய அரபுக் கல்லூரி விரிவுரையாளர் மௌலவி இர்ஷாத் (இனாமி) பயான் ஓதுவதையும்–

சாயி மத்திய நிலையத் தலைவர் எஸ்.என்.உதயநாயகன் கொழும்பு மாநகர பிரதி மேயரை கௌரவிக்கின்றமையையும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ். பாஸ்கரா அருகில் நிற்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (இ)

கல்விக் கதிர் வெளியீடு

பகுதி - I 01

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

பிரபல ஆசிரியர் வே.அன்பழகன்

✦ 01 தொடக்கம் 38 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

▞ முதலில் தரப்பட்ட உருவின் நிழல உருவத்தைத் தெரிவு செய்க.

01. 1) 2) 3)

✦ பின்வரும் பாடலை வாசித்து 02 - 04 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

மழைக் காற்றைத் தாங்கிடும்	சின்னக் குருவி முயற்சியால்
வாழும் குஞ்சைக் காத்திடும்	சிறிய கூடு கட்டினால்
வலிமையான கூடுதான்	உன்னைப் போல சிறுவனால்
வடிவம் கூட அழகுதான்.	ஊரை வெல்ல முடியுமே!

02. இப் பாடலுக்குப் பொருத்தமான பழமொழி யாது?
1) காற்றுள்ள போதே தூற்றிக்கொள் 2)ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
3) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு 4) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

03. ஊரை வெல்ல முடிவது எப்படி?
1) சிறிய கூடு கட்டுவதால் 2)குருவிபோல் முயற்சி செய்வதால்
3) வலிமையான கூடு கட்டுவதால் 4) அழகான கூடு செய்வதால்

04. இங்கு சிறுவனுக்குக் கூறப்படும் புத்திமதி யாது?
1) முயற்சித்தால் வெற்றி அடையலாம். 2) அழகான கூடு கட்டுவது நல்லது
3) ஊரை வெல்லக் கூடு கட்ட வேண்டும். 4) வலிமையான கூட்டினால் குஞ்சைக் காக்கலாம்

✦ ஒருவருடைய முகத்தின் அரைவாசிப் பகுதி தரப்படுகிறது. அவரது எஞ்சிய பகுதியைத் தெரிவு செய்க.

05. 1) 2) 3) 4)

□ வகுப்பறைக் கதிரையில் மாணவன் ஒருவரின் சரியான இருத்தல் நிலையைக் காட்டும் படத்தைத் தெரிவு செய்க.

06. 1) 2) 3)

07. வெற்றிடத்தில் வரவேண்டிய சரியான எண் பின்வருவனவற்றுள் எது?

6	3	1	4	9
5	1	0	2	8
1	2	1	2	?

1) 3 2) 4 3) 1 4) 2

08. "?" என்னும் இடத்தில் வரவேண்டிய உரு எது?



A B C D E F

09. வானம் எப்போதும்
1) அழகானது 2) மேகங்களைக் கொண்டது
3) நீல நிறமானது 4) இருளானது

□ **A** தராசானது சமனிலையில் காணப்படுகிறது.



10. தராசு **B** இல் பொருள்கள் சமனிலையில் காணப்படவேண்டும் எனின் நிறை குறைந்த பக்கம் இடவேண்டிய உருவக் குறியீடு யாது?
1) ⬠ 2) △
3) ▭ 4) ◯

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



1) 2)
3) 4)

✦ 12ஆம், 13ஆம் வினாக்களுக்கு எண்கோலத் தொடரில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களைத் தெரிவு செய்க.

12. 

1) 24 2) 9 3) 15 4) 12

13. 

1) 18 2) 6 3) 12 4) 8

திட்டமிட்ட வாழ்க்கை இனிக்கும்..!

ஒரு ஊர், அங்கு ராஜா ஐந்து வருடம் தான் ஆட்சி செய்யமுடியும், 5 வருடம் முடிந்தவுடன் அவர் காட்டுக்கு அனுப்பப்படுவார்.

அங்குள்ள மிருகங்களுக்கு இரையாக நேரிடும்.

அதனால் யாரும் 5 வருடம் ஆட்சி செய்யமாட்டார்கள்.

1வருடம் இல்லை 2, 3 வருடங்களில் காட்டுக்குப் போக வேண்டும் என்பதை நினைத்து நினைத்து உடம்பு சரியில்லாமல் இறந்து விடுவார்கள்.

ஒருத்தர் மட்டும் சந்தோஷமாக 5 வருடம் ஆட்சி செய்தார். 5 வருடம் முடிந்து, இப்போ அவர் காட்டுக்குப் போக வேண்டும். எல்லோரும் ராஜாவை வழியனுப்ப வந்திருந்தார்கள்.

அப்போ அந்த ராஜா என்ன ராஜா மாதிரியே அந்தக் காட்டில் விட்டு விடச் சொன்னார். போகும் வழியில் ஒருத்தர் ராஜாவை பார்த்து நீங்க மட்டும் எப்படி சந்தோஷமா இருக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ராஜா நான் ஆட்சி செய்த முதல் வருடம் என் படையை அனுப்பி அந்த காட்டில் இருந்த கொடிய மிருகங்களை எல்லாம் கொன்றுவிட்டேன்.

இரண்டாவது வருடம் அந்தக் காட்டில் ஓர் அரண்மனை கட்டி விட்டேன். இப்போ அங்கு ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்கி விட்டேன். இப்போ நான்தான் அங்கே ராஜா என்றாராம்.

தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கூட்டுறவுத்துறையின் அங்கத்தவர்களாக இருந்து தமது பணியின் போது மரண மடைந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வில் வடமாகாண மகளிர்விவகாரம், கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்து கொண்டு பணியின் போது மரணமடைந்த அங்கத்தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளை அந்த அங்கத்தவர்களின் குடும்பத்தினரிடம் கையளித்தார்.

குருநகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த எமிலியான் சியாங் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை சியாங் பெல்சியானாவும், ஏழு கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த யோகராசா கிசாந்தன் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை காயாம்பு யோகராசாவும், வங்காலை புனித அந்தோணியார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த சென்யோன் குணசீலன் குரூஸ் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை குணசீலன் மிராண்டாவும், கொடிகாமம் பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினைச் சேர்ந்த சின்னவன் கனகரத்தினம் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை கனகரத்தினம் விஜயலட்சுமியும் அமைச்சரிடமிருந்து காசோலைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இழப்பீட்டுத் தொகையை வழங்கிய அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் –

குடும்ப உறவுகளை இழந்து நிர்க்கதியாக நிற்கின்ற குடும்ப

உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இந்தக் கொடுப்பனவு சிறியதாக இருந்தாலும், குடும்ப அங்கத்தவர்களின் நலன்களை ஈடுசெய்ய ஓரளவு உதவக்கூடியதாக இருக்கும்.

ஆனாலும், அவர்களின் இழப்பை அமைதிப்படுத்தவோ, சாந்தப்படுத்தவோ முடியாது. இந்த உதவு தொகையை பயன்படுத்தி உங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்த்தெடுக்கவேண்டும்.

முன்னாள் கூட்டுறவு அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தை எதிர்காலங்களில் அதன் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மகளிர் விவகார அமைச்சரின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் இ.கிருஷ்ணபிள்ளை, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமைப் பீட உத்தியோகத்தர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க)

காருடன் மோதிய மோட்டார் சைக்கிள்: கிளிநொச்சியில் இளைஞன் படுகாயம்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி – ஏ9 பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து கரடிப்போக்கு சந்திக்குச் சென்ற காரும், எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு கொழும்பில் இன்று மாலை

கொழும்பு, ஜூன் 15

ஷவ்வால் மாதத்துக்கான தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு பெரிய பள்ளிவாயலில் நடைபெறவுள்ளது.

கொழும்புபெரியபள்ளிவாசல் நிருவாகக் குழு உறுப் பினர்கள், அதன் பிறைக்குழு அங்கத்தவர்கள், அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை உறுப் பினர்கள், அதன் பிறைக்குழு உறுப் பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், ஏனைய பள்ளிவாயல்களின் நிருவாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மௌலவி ஜே. அப்துல்ஹமீது பஹ்ஜியின் தலைமையில் நடைபெறவுள்ள இப்பிறைக்குழுக் கூட்டத்தின் தீர்மானம் இலங்கை ஒலிபரப்புச் சேவை முஸ்லிம் நிகழ்ச்சியின் ஊடாக அறிவிக்கப்படவுள்ளது.

பழத் தோட்டங்களை உருவாக்கும் செயற்றிட்டம்

கொழும்பு, ஜூன் 15

காலி மாவட்டத்தில் பழச் செய்கை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

அம்பலாங்கொட, ஹிக்கடுவ, தவளம, கரந்தெனிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தப் பழ வகைத் தோட்டங்களை உருவாக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

120 பழவகைச் செய்கையாளர்கள் முதலாம் கட்டத்தில் இணைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேரரைச் சுடுவதற்கு கோட்டா உத்தரவு? கொழும்பு ஊடகம் அதிர்ச்சித் தகவல்

சமூக வலைத்தளங்களிலும் பிரசாரம்

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தேவைக்கு அமைய தேரர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கோபாவாக தம்மிந்த தேரர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தால் அவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கோட்டாபயவின் தேவைக்கு அமைய இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் சமூக வலைத்தளங்களில் இவ்வாறு பிரசாரம் செய்யப்படுகிறது என சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கதிர்காமத்தில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சொந்தமானதென கூறப்படும் வீட்டின் நிர்மாணிப்பு தொடர்பில் தம்மிந்த தேரர் ஊடகங்களுக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

எனினும் இந்த கொலையின் பிரதான சந்தேகநபர் விகாரையின் முன்னாள் பூசாரி என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர நேற்று முன்தினம் இரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மாவட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டம்

கடந்த வருடம் மே மாதம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத் தால் பாதிப்புக்கு உள்ளான களுத்துறை மாவட்ட மத்துகம, கீக்கியனகந்த தோட்டம், வெஸ்ட் டிவிஷினைச் சேர்ந்த, தொழிலாளர் குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

தோட்ட நிர்வாகத்தினால் தலா 7 பேர்ச் காணி ஒதுக்கப்பட்டு மலையக புதிய கிராமம், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு வீடும் தலா 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீடுகள் பாதிப்புக்கு உள்ளான குடும்பங்களுக்கு இலவசமாக கையளிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இளம் தாயும் மகளும் நேற்று விபத்தில் சாவு

குருநாகல் – கண்டி பிரதான வீதியின் நுகவெலடிப் போவுக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவரும் அவரது மகளும் உயிரிழந்துள்ளதுடன் பெண்ணின் கணவன் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று காலை 7.50 அளவில் நடந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரும் நுகவெலத்தபஜ்ஜல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

அம்பன்பொல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 24 வயதான சாந்தனிகுமாரி என்ற இளம் தாயும் 2 வயதான மகளுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

கணவன், மனைவி ஆகியோர் தமது பிள்ளையுடன் குருநாகல் பிரதேசத்தில் இருந்து கட்டுகஸ்தோட்டை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அதே திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதன் பின்னர் கட்டுகஸ்தோட்டையில் இருந்து குருணாகல் நோக்கி சென்ற பஸ்ஸின் பின்னால் உள்ள சக்கரங்கள் விபத்துக்குள்ளானவர்கள் மீது ஏறிச் சென்றுள்ளது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தென் மாகாண மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வேலைத்திட்டம்



தென் மாகாணத்தில் மீன் உற்பத்தியை மேம்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என மாகாண மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன்பிடிக் குடும்பங்களில் உள்ள பெண்களைக் கூடுதலாக சிறு உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது இதன் நோக்கமாகும். இதன் மூலம் ஆயிரம் குடும்பங்கள் பயனடைகின்றன என்றும் தெரிவிக்கப் படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்றம்

சென்னை, ஜூன் 15

டி.டி.வி. தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 18 பேரை சபாநாயகர் தகுதி நீக்கம் செய்தது செல்லும் என்று தலைமை நீதிபதியும், செல்லாது என்று நீதிபதி சுந்தரும் மாறுபட்ட தீர்ப்பு வழங்கியமையால் இந்த வழக்கு வேறு அமர்வுக்குச் செல்கிறது.

தமிழகத்தில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக ஆளுநரிடம் மனு அளித்த டி.டி.வி.தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்களான வெற்றிவேல் உட்பட 18 பேரை தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் கடந்த 18.9.2017 அன்று உத்தரவிட்டார். இதை எதிர்த்து 18 எம். எல். ஏக்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, உயர் நீதிமன்றம் மறு

உத்தரவு பிறப்பிக்கும் வரை 18 தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்துவது தொடர்பாக எந்த அறிவிப்பும் வெளியிடக் கூடாது என்றும், நம்பிக்கை வாக்கெடுப்பும் நடத்தக்கூடாது என்றும் 20.9.2017 அன்று உத்தரவிட்டார்.

பின்னர், அந்த வழக்கு தலைமை நீதிபதி இந்திராபானர்ஜி, நீதிபதி சுந்தர் ஆகியோர் தலைமையிலான முதன்மை அமர்வுக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணை பல நாள்கள் நடந்தன. முதல மைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, சபாநாயகர், கொறடா, டி.டி.வி. தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் ஆகியோருக்காக உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் பலர் இந்த வழக்கில் ஆஜராகி வாதாடினர். அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழக அரசியலில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனால், நேற்றுக் காலை முதலே நீதிமன்ற வளாகம் பரபரப்பாகக் காணப்பட்டது. டி.டி.வி. தினகரன் தனது ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர் 18 எம்.எல்.ஏக்களும் நீதிமன்றத்துக்கு வந்தனர். அதேசமயம், முதல மைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமைச் செயலகத்தில் அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த பரபரப்பான சூழ் நிலையில் நேற்று மதியம் 1.40 மணிக்கு நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். அப்போது, 18 எம். எல்.ஏக்களையும் தகுதி நீக்கம் செய்தது செல்லும் என தலைமை நீதிபதி இந்திராபானர்ஜி தீர்ப்பளித்தார்.

அதேசமயம் தகுதி நீக்கம் செல்லாது என நீதிபதி சுந்தர் தீர்ப்புக் கூறினார். இவ்வாறு நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியமையால் இனி மூன்றாவது நீதிபதிக்கு இந்த வழக்கு செல்லும் மூன்றாவது நீதிபதி விரைவில் அறிவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அணு ஆயுதங்களை அழித்த பிறகே வடகொரியா மீதான தடை நீக்கம்

அமெரிக்கா அறிவிப்பு

வொஷிங்டன், ஜூன் 15

அணு ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விட்டன என்பதை உறுதிசெய்த பின்னர்தான் வட கொரியா மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து முடிவு செய்ய முடியும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

அமெரிக்கா-வடகொரியா ஜனாதிபதிகள் இடையே பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி சிங்கப்பூரில் இருநாட்டு ஜனாதிபதிகளும் சந்தித்துப் பேசினார்கள். அப்போது டிரம்ப்-கிம் ஜோங்உன் இடையே சமரச ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

அதில், வடகொரியாவில் உள்ள அணு ஆயுதங்கள் அனைத்தையும் அழித்து விடுவதாக கிம்ஜோங் உன் ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே வடகொரியாவுக்கு நெருக்

கடி கொடுக்கும் வகையில் பல்வேறு பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து இருந்தது.

இருநாடுகளுக்கும் இடையே சமரச ஒப்பந்தம் இப்போது ஏற்படுத்தப்பட்டு இருப்பதால் இந்த பொருளாதாரத் தடைகள் உடனடியாக நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தீர்ப்பால் எங்களுக்கு எந்த பின்னடைவும் இல்லை

தகுதி நீக்கம் குறித்து தினகரன் கருத்து

சென்னை, ஜூன் 15

எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்க வழக்கில் இரண்டு நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ள நிலையில், இந்தத் தீர்ப்பால் தங்களுக்கு எந்தப் பின்னடைவும் இல்லை என டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் டி.டி.வி. தினகரன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

புதுச்சேரி சட்டசபை சபா நாயகர் உத்தரவுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், தற்போது சபாநாயகர் உத்தரவில் தலையிட முடியாது என தீர்ப்பு வழங்கப்படுகிறது. 50 சதவிகித வெற்றி எங்களுக்குக் கிடைத்துள்ளது. விரைவில் 100 சதவிகித வெற்றி கிடைக்கும்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏ.க்களும் என்னுடன் தான் உள்ளனர். அவர்களின் முடிவே எனது முடிவு. மக்களுக்கு எதிரான அரசு நீடிக்கிறது என்ற ஒற்றை வரியே பதிலாக இருக்கிறது. தீர்ப்பால் தங்களுக்கு எந்த பின்னடைவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

வடகொரியா மீதான பொருளாதாரத் தடை; நீங்க ஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும்

ரஷ்ய தூதுவர் தெரிவிப்பு

மொஸ்கோ, ஜூன் 15

வடகொரியா மீதான பொரு ளாதார தடைகளை நீக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா. சபைக்கான ரஷ்ய தூதுவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா சமீப காலமாக பல முறை அணுகுண்டுகளையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்தது. மேலும், ஹைட்ரஜன் குண்டுப் பரிசோதனையிலும் முழுமையான வெற்றி பெற்றதாகவும் அந்த நாடு தெரிவித்திருந்தது.

இதனால், ஆத்திரமடைந்த அமெரிக்கா, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் வடகொரியாவுக்கு எதிராக கடும் பொருளாதாரத் தடைகள் அடங்கிய தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது.

வடகொரியாவின் நிலக்கரி, லெட் (கனிமப்பொருள்) மற்றும் கடல் உணவுகள் ஏற்றுமதி என வடகொரியா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை உள்ளடக்கிய தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்து, ரஷ்யா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளின் ஆதரவுடன்

நிறைவேற்றியது.

அதைத்தொடர்ந்து, தென் கொரியாவின் முயற்சியினால் அமெரிக்கா மற்றும் வட கொரியா தலைவர்களின் அமைதிபேச்சுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டு சிங்கப்பூரில் மூன்று தினங்களுக்கு முன்னர், அந்த வரலாற்று சிறப்பு மிக்க சந்திப்பும் நடந்து முடிந்தது.

கிம் ஜாங் உன் உடனான சந்திப்பின் போது, நான் பொரு ளாதார தடைகளை நீக்க வேண்டும் என்றுதான் விரும்பு கிறேன். ஆனால், அணு ஆயுதங்களை முற்றிலுமாக வடகொரியா அழித்த பின்னரே தடை நீக்கம் பற்றி முடிவு செய்யப்படும். எனவே, தற்போதைக்கு இந்த தடைகள் தொடரும் என ட்ரம்ப் கூறியிருந்தார்.

இந்த நிலையில், இது குறித்து ஐ.நா. சபைக்கானரஷ்யதூதர் வாசிலி நெபென் சியா பேசுகையில்-

எதிரும் புதிருமாக இருந்த இருநாட்டு தலைவர்கள் சந்தித்து பேசியதில் மகிழ்ச்சி. வடகொரியா அணு ஆயுதங்களை கைவிட முடிவு செய்துள்ளது. இதை ஊக்கப்படுத்தும் விதமாக அந்த நாட்டின் மீதான பொருளாதார தடைகளை நீக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட கொரியா மீதான பொருளாதார தடைகளை நீக்கும் விவகாரத்தில் ரஷ்யா தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் இம்மாத இறுதியில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்துக்கு ரஷ்ய தூதர் வாசிலி நெபென்சியா தலைமை தாங்க உள்ளார்.

இந்தக் கூட்டத்தில் சிங்கப்பூர் சந்திப்பின்போது ஏற்பட்ட ஒப்பந்தம் மற்றும் வட கொரியா மீதான பொருளாதார தடை நீக்கம் தொடர்பாக விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு 19 மாத சிறைத் தண்டனை!

விசாரணை அதிகாரிகளிடம் தனது செல்போனை ஒப்படைக்க மறுத்த குற்றத்துக்காக மாலைத்தீவு முன்னாள் ஜனாதிபதி மம் மூன் அப்துல் கயூமுக்கு 19 மாதம் சிறைத் தண்டனை விதித்து மாலைத்தீவு நீதிபதி நேற்றுமுன்தினம்தீர்ப்பு வழங்கினார்.



மாலைத்தீவு முன்னாள் ஜனாதிபதி மம் மூன் அப்துல் கயூம். 80 வயதான இவர், 1978 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை சர்வாதிகாரியாக இருந்தார்.

தன்னுடைய சகோதரரும், தற்போதைய ஜனாதிபதியுமான யாமீன் அப்துல் கயூமின் ஆட்சியை கவிழ்க்க சதி செய்தார் என கடந்த பெப்ரவரி மாதம் கயூம் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில், விசாரணை அதிகாரிகளிடம் தனது செல் போனை ஒப்படைக்க மறுத்த குற்றத்துக்காக மம்மூன் அப்துல் கயூமுக்கு 19 மாதம் சிறைத் தண்டனை விதித்து, மாலைத்தீவு நீதிமன்றம் நேற்றுமுன்தினம்தீர்ப்பு அளித்தது.

அவருடன் கைது செய்யப்பட்ட தலைமை நீதிபதி அப்துல்லா சயீதுக்கும் அதே குற்றத்துக்காக 19 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்து விவகார பிரதி அமைச்சர் விவகாரம்; மட்டக்களப்பில் இந்து குருமார் ஆர்ப்பாட்டம்

இந்து விவகார பிரதி அமைச்சர் பதவி காதர் மஸ்தானுக்கு வழங்கியமையக் கண்டித்து இந்து குருமார்கள் மட்டக்களப்பில் நேற்றுக் காலை காந்தி பூங்காவிற்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட இந்து குருக்கள் மார்கள் இஸ்லாமிய விவகார பிரதி அமைச்சராக இந்து ஒருவர் நியமிக்கப்படுவாரா? இல்லையேல் இந்துமதவி வகாரத்திற்கு இஸ்லாமிய நபர் எதற்காக? அரசாங்கமே நீதி சொல்லு நீதி நியாயங்களை கடைப்பிடி, இந்து மக்களின் உணர்வுகளோடு விளையாடாதீர்கள், ஆலயத்தை அழித்தீர் நிலத்தையும் பிடித்தீர் இனி இந்து மக்களையும் அழித்தொழிப்பீரே, உடனடியாக கொடுத்த பதவியை இரத்துச் செய், இன்று இந்துகுருமார் வீதிக்கு வரவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது என பதாகைகள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்த நியமனம் ஒட்டுமொத்த இந்து மதத்தையும் தமிழர்களையும் அவமானப்படுத்தியுள்ளீர்கள், இந்த நாட்டில் சமாதானமும் நல்லாட்சியும் இடம் பெறவேண்டும் என்பதற்காக பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் இந்துமக்களாகிய நாங்கள் வாக்களித்து உங்களை அரியாசனத்தில் அமரச் செய்தோம், இதற்கு பரிகாரமாக இந்து கலாசார பிரதி அமைச்சராக இஸ்லாமியர் ஒருவரை நியமித்து எம்மையும் எமது மதத்தையும் அவமானப்படுத்தியுள்ளீர்கள்.

இந்த நாட்டில் இவ்வாறான செயற்பாட்டால் தான் தமிழ் மக்கள் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது, இதிலிருந்து இன்னும் முழுமையாக மீட்சி பெறாத நிலையில் இனப் போராட்டத்தோடு மதப் போராட்டத்தைக் கொண்டு வந்து எமது மக்களை நிம்மதியாகவும் சமாதனமாகவும் வாழ முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளீர்கள்.

எனவே, இந்த நியமனம் குறித்து ஜனாதிபதி இந்து தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும், உடனடியாக அமைச்சர் பதவியை இரத்து செய்து ஓர் இந்து மதத்தவருக்கு வழங்க வேண்டும்.

பௌத்தசாசன அமைச்சு பதவியை ஒரு இஸ்லாமிய நபருக்கு வழங்க முடியுமா? அது நிச்சயமாக முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். எனவே இது எமது இந்து மதத்தையும் தமிழர்களையும் பழிவாங்கும் நிகழ்வாகவே கருதுகின்றோம் என தெரிவித்தனர்

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து மட்டக்களப்பு அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு சென்று அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மகஜர் கைளிக்கச் சென்றனர்.

ஆனால், நிர்வாக சேவை அதிகாரிகளின் பணிப்பஷ்கரிப்பால் அங்கு அரச அதிபர், மேலதிக அரச அதிபர்கள் கடமைக்கு வராததன் காரணத்தினால் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் குணநாயகத்திடம் மகஜரை கையளித்து பின்னர் ஆர்ப்பாட்டக்காரர் கலைந்து சென்றனர்.

தேக்கு மரக்குற்றிகள் மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு – தொப்பிகல நரக்கமுல்ல காட்டில் சட்ட விரோதமான முறையில் கடத்தப்பட்ட ஒரு தொகுதி தேக்கு மரக்குற்றிகளை உழவு இயந்திரத்துடன் புல்லுமலை வட்டார வன அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இதன்போது, உழவு இயந்திரத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து இந்த உழவு இயந்திரம் கூமாச்சோலைப் பகுதியைக் கடக்க முற்பட்டபோது வழிமறித்துச் சோதனையிடப்பட்டுள்ளது.

வன பாதுகாப்பு அதிகாரி எம்.ஏ.ஜாயாதலைமையிலான குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, சந்தேகநபர் கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என வன இலாகா அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் மகனுக்குப் பிணை!

கொழும்பு, ஜூன் 15

இராஜாங்க அமைச்சர் பலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டாரவை பிணையில் செல்ல சிலாபம் நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மது போதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியமை, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று சிலாபம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை பிணையில் செல்ல அனுமதித்ததுடன், அவரது வாகன அனுதிப் பத்திரத்தை அவரிடம் வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

நுண் நிதிக்கடன் செயற்பாட்டுக்கு எதிராகக் கவனவீர்ப்புப் பேரணி

நுண்நிதிக் கடன் செயற்பாட்டால் அசௌகரியங்களை எதிர் நோக்கும் சமூகங்களை பாதுகாப்பது தொடர்பாக அரசுக்கும், இலங்கை மத்திய வங்கிக்கும்தொடர் அழுத்தம் கொடுக்கும் முகமாக வவுனியா மாவட்ட சிவில் சமுக அமைப்புக்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக்குழுக்களின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்ஒன்று இடம்பெற்றது.

கடனைக் கொடுத்து குடும்பத்தைக் குலைக்காதே, வட்டியால் மக்களின் வயிற்றில் அடிக்காதே, பெண்களை சீரழிக்கும் நுண்கடன் நிறுவனங்களை இழுத்துமூடு,கடனில்பெண்களை இலக்கு வைக்காதே, உயிரைக் குடிக்கும் வார்த்தைகளை உமிழாதே.

இழப்பதற்கு இனி எம்மிடம் உயிர் மட்டுமே உள்ளது, ஏழைகளின்உணர்வை புரிந்துகொள், வாழ்வதற்காய் கடன் பெற்றோம் வாழ்விழந்து நிற்கின்றோம், தற்கொலை அதிகரிப்பதற்கு கடனே நீயே காரணம், குடும்ப வன்முறைக்கும் கடன் நீயே காரணம், நுண் நிதிகடனே குடும்ப வன் முறைக்கு அத்திபாரம் இடாதே, கடனே இளம் சந்ததியை நரகத்தில் தள்ளாதே போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பழைய பஸ் நிலையத்தில் காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் பஜார் வீதி வழியாக சென்று ஹொரவப்பொத்தானை வீதியூடாக வவுனியா மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது.

10 நிமிடங்கள் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கோரிக்கைகள் அடங்கிய வவுனியா மாவட்ட அரச அதிபருக்குரிய மகஜரை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் சாந்தினி பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, நுண்நிதி நிறுவனங்களின் பிரச்சினை களில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் கவனவீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க- 100)

மாணவிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாலியல் துன்புறுத்தல்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருந்தாலும் தற்போது இலங்கையிலும் இவ்வாறான துன்புறுத்தல்களைக் காணக் கூடியதாக உள்ளது. ஆயினும் எமது நாட்டின் சட்டத்திற்கமைய இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாகத் துன்புறுத்தல் சம்பவங்களும் குறைவடைந்து வருகின்றன. இவ்வாறான சம்பவங்கள் குறைவதற்காக மேலும் மேலும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்–என்றார்.(ஜ–7)

போராளிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி உள்ளிட்ட அமைச்சர்கள் அடங்கிய இந்த அரசின் செயற்பாடுகள் நாட்டின் நல்லெண்ணத்திற்கும் எதிர்காலத்திற்கும் நல்லதல்ல என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் காட்டமாகத் தெரிவித்தார்.

உயிரிழந்த புலிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டுமென மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அமைச்சரவையில் முன்வைத்த யோசனைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறித்து முதலமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

புலிகள் இறந்துவிட்டார்கள், அழிந்துவிட்டார்கள் என்று சொன்ன பின்னர் அதிலிருந்து வந்தவர்களுக்கு எந்தவிதமான வாழ்வாதார உதவிகளையும் கொடுக்காமல் விடுவது மனித உரிமைகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கை என்று நான் நம்புகின்றேன்.

புலிகள் மீது ஏதோ அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சி இருப்பதால் மக்களை மக்களாகப் பார்க்காதது பிழையான கருத்தென்றே நம்புகின்றேன். அமைச்சர் சுவாமிநாதன் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது மிகச் சரியானது. அதற்கு ஏற்றவாறு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்காதமை பிழை என்றுதான் நான் கூறுவேன்.

இதேபோன்று தான் இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்கப் பார்க்கின்றனர் என்றெல்லாம் சிலர் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். இராணுவத்தையாரும் காட்டிக் கொடுக்கவில்லை. அந்த இராணுவத்திலும் பிழைகளைச் செய்தவர்களையே காட்டிக் கொடுக்குமாறு கூறுகின்றோம். முழு இராணுவத்தையும் பிழை என்று சொல்லவில்லை.

ஆகவே இதிலே உண்மை எது பொய் எது என்ற எந்தவிதமானதொரு அடிப்படையும் இல்லாமல் புலிகள் மீதான காழ்ப்புணர்ச்சியின் நிமித்தம் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது இந்த நாட்டின் நல்லெண்ணத்துக்கும் எதிர்காலத்திற்கும் நல்லதென்று கூற முடியாது– என்றார். (ஜ–7)

விளக்கமற்றவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு வடக்கு முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் பதிலடி கொடுத்துள்ளார்.

யாழ். வந்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் நேற்று மாலை வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் முடிவில் முதலமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

இதன்போது வடக்கு முதல

ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளரும், கேலிச் சித்திரக் கலைஞருமான பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு ஹோமாகமநீதிமன்ற வளாகத்தில் வைத்து பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம் பெற்றது. சம்பவம் தொடர்பாகச் சந்தியா எக்னெலிகொட வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலும் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டிலும் ஞானாசாரதேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டபோதும் பின்னர் அந்த வழக்கிலிருந்து அவருக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தது.

சாட்சிகளுக்கு அழுத்தம் மேற்கொள்வதையும், வெவ்வேறு இடங்களில் பல்வேறு அறிக்கைகளை விடுவதையும் நிறுத்திக் கொள்ளுமாறும் நீதவான் அவருக்குக் கடும் நிபந்தனை விதித்தே பிணை வழங்கினார்.

இந்த நிலையில் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது. ஹோமாகம நீதிவான் உதேஷ் ரணதுங்க முன்னிலையில் வழக்கு கடந்த மே 24ஆம் திகதி தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது.

சந்தியா எக்னெலிகொடவுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் எதிரியான ஞானசார தேரர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு சாட்சியங்களின் ஊடாக நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவரைக் குற்றவாளி என மன்று தீர்ப்பளிக்கிறது என்று நீதிவான் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஞானசார தேரருக்கான தண்டனைத் தீர்ப்பை நேற்று 14ஆம் திகதி வழங்குவதாக வழக்கை ஒத்தி வைத்திருந்தார்.

அதன்படி ஹோமாகமக நீதிவான் உதேஷ் ரணதுங்க, தண்டனைத் தீர்ப்பை நேற்று வழங்கினார்.

குற்றவாளிக்குத் தண்டனைச் சட்டக் கோவையின் அடிப்படையில் இரண்டு குற்றத்துக்குமாக ஒரு வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. இரண்டு குற்றங்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டும்.

பாதிக்கப்பட்டவரான சந்தியா எக்னெலிகொடவுக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்த வேண்டும் என்று நீதிவான் தண்டனைத் தீர்ப்பளித்தார். (ஜ)

மைச்சர் இனங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார் என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன வெளியிட்டிருக்கும் கருத்து தொடர்பில் வினவியபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போரின் பின்னர் இதுவரை காலமும்வடக்கு-கிழக்குமாகாண மக்களிடையே ஒருவிதமான வலுவற்றதன்மையே இருந்தது. ஆயினும் திரும்பவும் நாங்கள் எங்கள் உரிமையை முன்னெடுக்கின்றபோது இவ்வாறான கருத்துக்கள் தெற்கிலிருந்து வருவது சகஜம்.

ஏனெனில் தமிழ் மக்கள் எதுவும் பேசாது–கேட்காது வாயை மூடிக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், தாங்கள் நினைத்ததைச்செய்துகொண்டே போகவேண்டுமென்ற எண்ணத்திலும் அவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் அதற்கு மாறாக எங்களுடைய உரித்துக்களை–எங்களுக்கிருக்கும் உரிமைகளை நாங்கள் கூற வரும்போது அவற்றைச் சிங்கள மக்களுக்கு எதிரானவையாகக் காட்டுகின்றார்கள். ஆனால் நாம் எமது உரித்துக்களை–உரிமைகளைக் கேட்பது சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல.

தமிழ்மக்களுக்குரியஉரிமைகளை–அந்த மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் பேசுவதைச் சிங்கள மக்களுக்கு எதிரானதென்று சொல்ல முடியாது. தமிழ் மக்களுக்குக் கொடுக்கவேண்டியஉரிமைகளைத்தட்டிப்பறித்து எடுத்து தங்களின் கைவசமே வைத்திருப்பது தான் தவறு. அதைச் சுட்டிக்காட்டினால் இனவாதம் என்று சொல்வது அமைச்சர் ராஜித விளங்காமல் கூறும் கூற்று – என்றார். (ஜ–7)

கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கை மருத்துவச் சபை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு உள்ளகப் பயிற்சி மருத்துவர்களை நியமிப்பதற்கான அனுமதியைச் சுகாதார அமைச்சுக்கு வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாகத் தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எட்டு உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நாளை சனிக்கிழமை வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் தற்போது யாழ். போதான வைத்தியசாலை, வவுனியா மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் மட்டுமே இதுவரை காலமும் உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொதுவைத்தியசாலைக்கு வரும் உள்ளகப் பயிற்சி மருத்துவர்களில் எட்டுப் பேரில் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் என்றும், ஆனால் யாழ். பல்கலைகழகத்திலிருந்து வருடந்தோறும் 90 மருத்துவர்கள் மருத்துவக் கல்வியை நிறைவு செய்து உள்ளகப் பயிற்சிக்குச் செல்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ–70)

வட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்றார் எனச் சங்கானை பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டன.

அவர் தனக்குக் கிடைத்த முறைப்பாடுகள்தொடர்பில்விசாரணை செய்ய மாணவிகளின் பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதனால் சிறுவர்பாதுகாப்புஅலுவலருடன் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசாரணையில்மாணவிகள் மூவரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

அவற்றை அடிப்படையாக வைத்து பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்தமை மற்றும் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை வழங்கினார் என்ற குற்றச்சாட்டுக்களின் அடைப்படையில் ஆசிரியர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் அவர், மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள்என வாக்குமூலம்பெறப்பட்ட மூன்று மாணவிகளும் நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மருத்துவச் சோதனைக் குட்படுத்தப்பட்டனர். மருத்துவ அறிக்கையைப் பொலிஸார் நீதி

13 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மா அதிபர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

தபால் சேவையில் இணைத்துக் கொள்ளும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தபால் தொழிற்சங்கத்தினர் கடந்த நான்கு நாள்களாகத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே தபால் விநியோக மத்திய நிலையம் உட்பட நாடு முழுவதும் 13 இலட்சத்துக்கும் அதிகமான தபால்கள் தேங்கிக் கிடங்கின்றன என்று தபால் மா அதிபர் அலுவலம் சுட்டிக்காட்டியுள்ளது.

எமது கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் உரிய தீர்வை இதுவரை பெற்றுக்கொடுக்கவில்லை. எமக்கான தீர்வு கிடைக்கும்வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்தார். (ஜ)

எதிர்ப்புக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார பிரதி அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியுடன் இன்று (நேற்று) சந்தித்து பிரதி அமைச்சர் பதவியைப் பெற்ற பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். நான் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கின் அபிவிருத்தி மற்றும் இந்து கலாசார பிரதிஅமைச்சைஏற்றுக்கொண்ட நிலையில் இந்து கலாசார பிரதி அமைச்சராக நான் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக அரசியல் நோக்கம் கருதித் திட்டமிட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் மதங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், பொது அமைப்புக்கள் சில கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும் நானாக முன்வந்து இந்து கலாசார பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன் ஏனைய அமைச்சின் பிரதி அமைச்சராகச் செயற்படுவேன் – என்றார். (ஜ–100)

மன்றில் முன்வைத்தனர்..

அதனை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, வட்டுகோட்டையில்இயங்கியதனியார்கல்வி நிலையத்தில் சிறுமிகள் மீதான பாலியல் வதைகளுக்கும் வேறு ஒரு ஆசிரியருக்கும் தொடர்பிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அந்தத் தகவல் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியர் வட்டுக்கோட்டையில் பிரபல பாடசாலையில் கற்பிக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து ஆசிரியர் நீதிமன்றால் விடுவிக்கப்படும்வரை பாடசாலையிலிருந்து அவரை இடைநிறுத்துவதாகப் பாடசாலை அதிபர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். (ஜ–7)

கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மற்றும் கொட்டகைகள் என்பவற்றுக்குத் தீயிட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனத்தில் கற்பித்த ஆசிரியர் ஒருவர் பதின்ம வயதுச் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அந்த ஆசிரியர் கற்பித்த தனியார் கல்வி நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் வட்டுகோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (ஜ–7)

தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில்நேற்றுக்காலைநடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டவடக்கு மாகாண முதலமைச்சரும் போக்குவரத்து அமைச்சருமான சி.வீ.விக்னேஸ்வரன் நிரந்தர வழி அனுமதிப் பத்திரங்களை வழங்கினார்.

வடக்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரும்மன்னார்மாவட்டமுன்னாள் அரச அதிபருமான நீக்கிலாஸ் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினர்கள், போக்குவரத்துச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பஸ் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ–7)

இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரத்துறை நீங்கலாகவே வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும்என இந்துகலாசார அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

"மீள்குடியேற்றம்,புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத விவகாரப் பிரதி அமைச்சராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்காதர் மஸ்தான் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

இந்து மதம் சாராத ஒருவர் இந்து கலாசாரப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டதை இந்துக்கள் எதிர்ப்பைவெளியிட்டனர்.

இந்த நிலையில் இந்து கலாசாரப் பிரதி அமைச்சு பொறுப்புக்கள் நீங்கலாகவே காதர் மஸ்தானின்துறைசார்பொறுப்புக்கள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும்" என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். (ஜ)

கோலாகல ஆரம்பம்

சர்வதேசமே ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஃபிபா உலகக்கிண்ண உதைபந்தாட்ட தொடர் நேற்று வியாழக்கிழமை ரஷ்யாவில் கோலாகலமாக ஆரம்பமானது. ஜூலை 15ஆம் திகதி வரை 11 நகரங்களில் 12 நவீன கால் பந்தாட்ட அரங்குகளில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைப் போட்டி ஏற்பாட்டுக் குழு தயார்படுத்தியுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் சிவப்பு சதுக்கத்தில் சிறப்பு இசை நிகழ்ச்சி யொன்றும் நடத் தப்பட்டுள்ளது.

பிபா உலகக்கிண்ணத்தைப் பிரதி பலிக்கும் வகையில் பிரம்மாண்டமான அமைக்கப்பட்ட மேடையில் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிபா தலைவர் ஜியானி இன்பின்டீனோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

'கோல் சிம்பொனி' என்ற தொனியி லான இந்த இசை நிகழ்சியில், ரஷ்ய பாரம்பரிய இசையுடன் கூடிய பாடல்க ளும் பாடப்பட்டன.

உலகக் கிண்ணத் தொடரை கண்டு களிக்க பல்லாயிரக்கணக்கான இரசிகர் கள் ரஷ்யாவுக்குப் படையெடுத்துள் ளதோடு, உலகின் பல பாகங்களில் பிரம்மாண்ட திரைகளில் போட்டிகளை கண்டுகளிக்க ரசிகர்கள் தயாராகி வருகின்றனர்.

உலகக்கிண்ணக் உதைபந்து தொடரை முன்னிட்டு இந்தியாவில் மணற் சிற்பம்

ரஷ்யாவில் ஆரம்பமாகியுள்ள உலகக்கிண்ண உதைபந்து தொடரை முன்னிட்டு, இரசிகர்கள் கால்பந்து விளையாட்டைக் கௌரவிக்கும் வகையில் அதற்காக பல அர்ப்பணி புகளை செய்வது உலக வழக்கம்.

அந்த வகையில் உதைபந்து விளை யாட்டை நேசிக்கும் இந்திய இரசிகர் ஒருவர், அனைவரும் வியக்கும் வகை யில் மணற் சிற்பமொன்றை உருவாக் கியுள்ளார்.

ஒடிசா மாநிலம் பூரி நகரில் அமைந் துள்ள கடற்கரையொன்றிலேயே இந்த அற்புதமான கடற்சிற்பம் அமைக் கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற இந்திய மணல் கலைஞர், சுதர்சன் பட்நாயக், என்பவரே இந்த மணற் சிற்பத்தை செதுக்கியுள்ளார்.

வழமையான மணற் சிற்பங்கள் போலல்லாது நிறப்பூச்சு பூசி வடிவ மைக்கப்பட்டுள்ள இந்த சிற்பம், கண்களை கொள்ளை கொள்ளும் அளவுக்கு நேர்த்தியாக செதுக்கப் பட்டுள்ளது.

உதைபந்துடன் கூடிய சம்பியன் உல கக்கிண்ணம், வடிவில் செதுக்கப் பட்டுள்ள இந்த மணற்சிற்பத்தில் பிபா உலகக்கிண்ணம் ரஷ்யா 2018 என எழுத்திலும் செதுக்கப்பட்டுள்ளது.

மேலும், 'அமைதி மற்றும் நட்புக் கான பந்து' என்ற விடே வசனமும் அந்த மணற் சிற்பத்தில் பொறிக்கப் பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமாகியுள்ள உலகக் கிண்ண கால்பந்து திருவிழாவை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த மணற்சிற்பத்துக்குப்பார்வையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத் துள்ளது. அத்தோடு, இதனை காண வரும் இரசிகர்கள் இந்தச் சிற்பத்தை புகைப்படுமெடுத்துச் செல்கின்றனர்.

இதேபோல நுண்ணிய சிற்ப கலைஞராக எல்.ஈ.ஸ்வார் ராவ், பாட சாலை உபகரணங்களான வண்ணக் கட்டி மற்றும் பென்சில் கரியத்தில் மிகச் சிறிய உலகக்கிண்ணத்தை வடிவமைத்துள்ளார்.

மிகச் சிறிய வடிவில் வடிவமைக்கப் பட்டிருக்கும் இந்த உலகக்கிண்ணம், அசல் நிஜ உலகக்கிண்ணத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.

நான் ஜெயசூரியவை பார்த்து வளர்ந்தவன்

நான் இலங்கையின் சனத் ஜெயசூரியவை பார்த்து வளர்ந்தவன் என ஆப்கானிஸ்தான் அணியின் தலைவர் அஸ்கர்ஸ்டனிக்ஜாய் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது டெஸ்டை இந்திய அணிக்கு எதிராக விளையாடும் நிலையி லேயே ஆப்கான் அணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது ஆப்கானிஸ்தானின் கனவு. கடந்த பத்து வருட காலமாக எங்களைப் பார்த்து சிரித்தவர்கள், கிரிக்கெட்டில் என்ன உள்ளது அதனை விட்டு விடுங்கள் எனத் தெரிவித்த வர்கள் எல்லாம் எங்களை பாராட்டு கின்றனர்.

இவ்வாறான விமர்சனங்கள் காரண மாகவும் ஆண்டவனின் கருணை யாலுமே ஆப்கானிஸ்தான் இன்று டெஸ்ட் அணியாக மாறியுள்ளது.

நாங்கள் எங்கள் டெஸ்டை இந்தி யாவிற்கு எதிராக விளையாடுகின்றோம் எனக்கும் அணியினருக்கும் ஆப்கான் மக்களிற்கும் இது பெருமைக்குரிய தருணம் .

நாங்கள் முதலாவது டெஸ்டை இரசித்து விளையாட முயல்வோம். எந்த வித அழுத்தங்களும் இன்றி விளையாட முயல்வோம். ஆப்கான் அணியில் உள்ளவர்கள் சுதந்திரமாக விளையாடு வதையே விரும்புகின்றனர். எங்கள் கலாசாரம் அவ்வாறானது.

நான் சிறுவனாகயிருந்தவேளை சனத்ஜெயசூர்யவைப் பார்த்து வளர்ந் தேன் எனது கிரிக்கெட் 1996 இல் ஆரம்ப மானது.

நான் தொடர்ச்சியாக கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தவேளை ஜக்க லிஸை இரசித்திருக்கின்றேன். அதன் பின்னர் பாக்கிஸ்தானின் முகமட் யூ சுவை இரசித்திருக்கின்றேன்.

எங்கள் அணியில் எப்போதும் ஆக்ரோ சமாக விளையாடும் வீரர்கள் இருக்கின் றனர். ரசீத் செசாட் போன்றவர்கள் எப்போ தும் ஆக்ரோசமாக விளையாடுபவர் கள். அவர்களைச் சற்று நிதானமாக விளையாடுமாறுநான் கேட்டுக்கொள்வது வழமை என அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கான் அணித்தலைவர் கூறுகிறார்

உலகக் கிண்ண உதைபந்து

இன்றைய ஆட்டங்கள்

எகிப்து		5.30 PM		உருகுவே
மொறோக்கோ		8.30 PM		ஈரான்
போர்த்துக்கல்		11.30 PM		ஸ்பெயின்

மரண அறிவித்தல்

திருமதி.கந்தையா நாகம்மா

கோப்பாய் தெற்கு, கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் 13.06.2018 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும்,காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான முத்தையா (ஆசிரியர்), நவரத்தினம் (இலங்கை மின்சார சபை), இராசம்மா மற்றும் திருஞானபூங்கோதை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் அம்பிகைபாகன் (தபாலதிபர்), தங்கராஜா(பொறியியலாளர்,கனகலிங்கம்,கலாநிதி மனோகரன், அமரர் செல்வநாயகம், இராசமலர், தவமணி (கணக்காளர்), சுரேஷ் பிறேமச்சந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), கலாநிதி சர்வேஸ்வரன் (கல்வி அமைச்சர் வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் –

பாக்கியம் அமரர் தியாகராஜா, சற்குணமலர், வசுமதி,சுசி,கமலநாதன், சிவராசா, கோகில குமாரி, சுபாஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சந்திரமோகன், சாந்தினி, முகுந்தினி, தியாகமலர், தியாகவேணி,தியாகரூபன், தியாக சொரூபன், தியாகவதனி, சுதர்ஷன், நிருஜா, ஆனந்த முருகன், குன்றக்குமரன், ஆரணி, பார்த்தசாரதி, செல்வனா, வேலவன், சந்திரன், நாகம்மா, தாராகா, மேனகா, சொரூபிகா, பவித்திரா, காண்டீபன், பிரியங்கா, அபர்னா, விக்னேஸ்வர், நிஷா, கீதப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

யதுபரன், சாத்விகா, நிவேதிகா, கஜன், அர்ச்சுனா, ராகுல் துளசி, ஹரிகரன், பூஜா, ஆர்த்தி, அஸ்வினி, ஓவியா, இனியா, இலக்கியா, நிவேதன், நிஷாதன், ஸ்ருதி,ஆகஷன், குறிஞ்சி, அரன், அவிரா, மியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 13 – 01 – 1920

மறைவு 13 – 06 – 2018

021 223 0363
0777 7362 481
077 7184 410

தகவல் -
க.சுரேஷ் பிறேமச்சந்திரன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கலாநிதி.க.சர்வேஸ்வரன்
(கல்வி அமைச்சர் - வடமாகாணம்)

அதீத விலை குறைப்புடன் பரிசீலக்கப்படும்!!!
CROWN க்ரவுன்
மாபெரும் மலிவு விற்பனை
ஜூன் 04 தொடக்கம் 23 வரை
யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்
(யாழ்ப்பாணக் கோட்டைக்கு முன்னால்)
ஜப்பான் மற்றும் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தரத்திலான பொருள்கள் குறைந்த விலையில்!!!
விரையுங்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
RYOBI
Hot Line : 0777 572 145

உங்கள் அபிமான சனல்கள்
DAN தமிழ் ஒளி
DAN news
யாழ் TV
கல்வி TV CHANNEL-1
DAN MUSIC HD
ஓம் ரிவி
CHANNEL HOLY MARY
Pirai Television
அனைத்தும் ஆஸ்க் கேபிள் விஷன் ரி.வி. ஊடாக மட்டுமே ஒளிபரப்பாகின்றன. வேறு எந்தச் சட்டவிரோத அல்லது சட்ட பூர்வமான தொலைக்காட்சி சேவை வழங்குனர்கள் ஊடாகவும் எமது தொலைக்காட்சி சேவைகள் தற்போது ஒளிபரப்பாகவில்லை என்பதை எமது அபிமான நேயர்களுக்கு அறியத் தருகின்றோம். எதிர்காலங்களில் வேறு எந்த நெற்வேர்க்கிலும் இவை ஒளிபரப்பப்படமாட்டா.
707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.